6

அச்சிட்டு

[87. வாகடநூல் - தொடர்ச்சி]

(423-567)

(முதல் படி)

Typed.

1.சுவடியின் பெயர்	: வைகடநூல் -தொடர்ச்சி (423-567)
2.சுவடி எண்	: 87
3.படி எடுத்தவர்	: க.லலிதா
4.மொத்த பக்கங்கள்	: 423 முதல் 567முடிய
5.தட்டச்சு செய்தவர்	: வெ. சுப்புலட்சுமி.
6.தட்டச்சு பக்கங்கள்	: 67
7.தட்டச்சு எடுத்த நாள்	: 9.6.03 முற்பகல்
8.தட்டச்சு முடித்த நாள்	: 12.6.03 பிற்பகல்

௦௦௦

87.வாகட நூல் - (தொடர்ச்சி) -(423-567)

1. கொள்ளுங் காட்டி குமட்டிக்காய்

கொழுத்த பண்டி குக்குடமும்

முள்ளும் பேரிப் பூசனிக்காய்

- - - - - - - -

பள்ளத் தெழுந்த படர்செம்பு

படந்த ஞந்த கொடவள்ளை

கிள்ளுங் கீரை அரைக்கீரை

கிடங்கி கொட்டைச் சிற்றாரை

எள்ளத் தனையும் தின்பீரே

எல்லா மருந்தும் பாழாமே

கொள்ளு, குமட்டிக்காய், பூசணிக்காய், வள்ளை, கிள்ளுக்கீரை, அரைக்கீரை, சிற்றாரை ஆகியவற்றை எள்ளளவு சாப்பிட்டாலும் உட்கொண்ட மருந்து பயனளிக்காது.

2. ஆகிற கறிக்கு விபரம்

சிறுக்கீரையுடன் பொன்னாங் காணி

செய்யில் தூ துவிளையும் பலவனாம்

நறுநெய்யுடன் அகத்திச் சாறு

- அறிய கோத்திரங்காய்

நெருஞ்சி வாழைக்காய்ப் பூவுடனும்

ஈரப் பிலாக்காய் அட்டை

காண்டச்-சாறு உடும்புடன் -சிறுமீன்

நாரத்தங் காயோயிந்த கற்ப முற்றும்

சிறுகீரை, பொன்னாங்காணி, தூ துவளையின் நெய், அகத்திச்சாறு, கோத்திரங்காய், நெருஞ்சி, வாழைக்காய்பூ, ஈரப்பலாக்காய், அட்டை, காடைச்சாறு, உடும்பு, சிறுமீன், நாரத்தங்காய், ஆகியவற்றை பத்தியக் கறியாக உட்கொள்ளவும்.

3. <u>நீரிழிவுக்கு:-</u>

ஆவாரை நல்ல கொன்றை

அலைகட லமுதம் கோஷ்டம்பூவரசு

மேவிய மருதி னோடு

விரைமகிழ்த் தாழைச் சாற்றில்

பூவிரி குழலி னாறே

பொருந்திய தேனி லுண்டால்

காவேரி நீரும் வற்றிக்

கடல்களுஞ் சுழலு மன்றோ

ஆவாரை, கொன்றை, கோட்டம், பூவரசு, மருதின்விதை ஆகியவற்றைத் தாழைச் சாற்றில் அரைத்துத் தேனில் உட்கொள்ள நீரிழிவு குணமாகும்.

4. சோகை, பாண்டுவுக்கு:-

கண்டிடும் பழைய கிட்டம்

கடுதிரி பலையின் சுக்கும்

கொண்டிடும் கொடிய வேலி

பிரமி சாரணையுங் கட்டி

கொன்றொரு கோமி யத்தில்

இதுசமன் காச்சி யுய்ய

அன்றுமோ சோகை பாண்டு

அமைந்துமே இருந்தி டாதே

பழைய கிட்டம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, கொடிவேலி, பிரமிசாரணை ஆகியவற்றை சமனெடுத்து கோமியத்தில் அரைத்துக் காய்ச்சிக் கொடுக்க சோகை, பாண்டு குணமாகும்.

..3

5. <u>குன்மத்துக்கு:</u>

குன்மங் கானு மது -கொல்லுங்

கொடிய கடிய னோக்காடு

கன்மங் கானு மொட்டாது

கள்ளிப் பாலோ டிந்துப்பு

தென்னங் காயில் குகைபிடித்துத்

தீயில் சுட்டுத் தின்பீராய்

புன்னைக் காயில் பாதிதின்ன

போனார் குன்மம் போனாரே

குன்மத்தில் அதிக வலி இருக்கும்.கள்ளிப்பால், இந்துப்பு, இவற்றைப் பொடித்து தேங்காய்க்குள் வைத்து மூடி அனலில் வைத்து சுட்டு சாப்பிடவும்.புன்னைக்காயில் பாதி அளவெடுத்து கொடுக்க குன்மம் உண்டாகும்

6. இருமலுக்கு_அடை_

கைய்யாந் தகரை நாயுருவி

கருங்காலி சங்கு ஆ தவளை

மெய்தான் சிவந்த எருக்கம்பூ

வேலிப்பருத்திஇவையேழும்

நொய்ய அரிசி யுடன்கூட்டி

நறுக்க வரைத்து அடைசுட்டு

கையா லெடுத்துத் தின்பீராய்க்

களைக்க வேண்டாங் கண்டீரே

கையாந்தகரை, நாயுருவி, கருங்காலி, சங்கு,ஆ தவளை, சிவப்பான எருக்கம்பூ, வேலிப்பருத்தி ஆகியவற்றை அரிசியுடன் சேர்த்தரைத்து அடையாகச் சுட்டு சாப்பிட இருமல் தீரும்.

7.நெல்லி திப்பிலி நெல்பொரி சர்க்கரை

நல்ல நெய்யில் நடுக்கல் தன்ன

இல்லை யில்லை இருமலு மீளையும்

தில்லை மேவுஞ் சிதம்பர ராணையே

நெல்லி திப்பிலி, நெற்பொரி, நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றைச் சேர்த்து பொடித்து நெய்யில் கலந்து கொடுக்க இருமல், ஈளையும் குணமாகும்.

8.மேகுஷ் சகல வியாதிக்குத் தவி(அமுர்தசர்க்கரை)_

சீந்தித் தண்டு தோலரித்துச்

சிறுக நறுக்கித் தானிடித்து

சார்ந்த நீரில் தான்போட்டுத்

தானே பிழிந்து வடிகொண்டு

காய்ந்த பானை தனில்வார்த்து

காத்துபடாம லொருசாமம்

கூர்ந்த மாதே நீரிருத்துக்

கூட்டி ரடையில் கற்கமதே

சீந்தில் தண்டின் மேல் தோலை நீக்கி இடித்துத் தண்ணீரில் போட்டு பிழிந்து வடித்தெடுத்துக் கொள்ளவும். காய்ந்த பானையில் ஊற்றி 3மணிநேரம் அப்படியே வைத்திருக்கவும்.

9.அடியில் கற்கந் தனையிருத்து

அடவாய்ச் சட்டி தனில்போட்டுக்

கடிய வெய்யில் தனில் வைத்துக்

காய்ச்சி யெடுத்து ஓர்படிக்கு

கொடிய முந்திரி தக்கோலம்

கோஷ்ட மதரந் திரிகடுகு

கடிய நெல்லிப் பருப்பிவுடன்

காட்டி லமுக்கிரா வேருடனே

பின்னர் அடியில் நிற்கும் கற்கத்தை எடுத்து சட்டியில் போட்டு வெய்யிலில் வைத்து காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.1.3லிட்டர் குடிநீருக்கு முந்திரி,தக்கோலம்,கோட்டம்,அதிமதரம்,சுக்கு,மிளகு,திப்பிலி, நெல்லிப்பருப்பு,அமுக்கிரா வேர்.

10.ஏலம் பூனைக் காலிவிரை

இயல்பாய்ச் சூடன் சீரகமும்

கோலஞ் செய்யுஞ் சந்தனமுஞ்

குங்குமப் பட்டை சாதிக்காய்

சீலம் பெரிய அரேணுகமும்

சிறுனா கப்பூந் தான்கூட்டி

வாலத் தடங்கண் மானனையீர்

மாதே மருந்து தனைக் கூட்டே

ஏலம்,பூனைக்காலிவிதை, சூடன், சீரகம்,சந்தனம்,குங்குமப்பட்டை, சாதிக்காய், அரேணுகம்,சிறுநாகப்பூ ஆகிய கடைச்சரக்குகளைக் கூட்டிக் கொள்ளவும்.

11. கூட்டே தாளிசை பத்திரியும்

கொண்டே யொவ்வொன் றிருகளஞ்சு

நாட்டே நீர்வள்ளி யஞ்சுபலம்

நன்றாம் நிலைப்பனை பலமஞ்சு

கூட்டெலா மிச்சம் பலமொன்று

சொன்னேன் நெருஞ்சி ஒருபலமாம்

பாட்டே வெட்டி வேர்பலமாம்

பதுமத் தாமரை யல்லியுமே

தாளிசபத்திரி ஆகிய முன் சொன்ன அனைத்தையும் வகைக்கு 10கி எடுக்கவும். நீர்வள்ளி 175கி, நிலப்பனை 175கி, இலாமிச்சம் 35கி நெருஞ்சில் 35கி, வெட்டிவேர், தாமரை, அல்லி, தாமரைக்கிழங்கு ஆகியவற்றை வகைக்கு 35கி எடுக்க.

12. பதமாந் தாமரைக் கிழங்குதன்னை

பரிவா யோர்பலந் தான்கூட்டி

விதமாக யிடித்துத் தூள்பண்ணி

வேறே பொடியைத் தான்வைத்துச்

சுதமா முந்தின பொடினாளி

தோன்றுங் கடைமருந் தோர்படியும்

இதமாஞ் சீனி யோர்படியும்

இயல்பாய்க் கொட்டி மருந்துகொள்ளு

அனைத்தையும் இடித்துப் பொடித்து மேற்சொன்ன கடைமருந்தின் பொடியையும் சேர்த்து வெள்ளைச்சர்க்கரை 1.3லியையும் கலந்து கொள்ளவும்.

13. கொள்ளே மருந்து மூவகையும்

கூட்டி வகைக்கு வெருகடிதான்

துள்ளே பசுவின் நெய்தனிலே

சுகமாய்க் குழைத்து யிருபதுதாள்

உள்ளே கொள்ளு வியாதியெல்லாம்

ஓடி ஒழிந்து போய்விடுங்காண்

தள்ளு மேக மிருபதையுந்

தானே துரத்துஞ் சீந்திந்தண்டிதுவே

மூன்று வகைப் பொடியும் சேர்ந்த இம்மருந்தை மூவிரலளவெடுத்து பசுநெய்யில் குழைத்து (இருவேளை) இருபது நாட்கள் உட்கொள்ளவும். இருபது வகை மேகமும் குணமாகும். சீந்தில் தண்டிற்கு இந்நோயை நீக்கும் குணமுண்டு.

14. தண்டது கடுப்பு உஷ்ணந்

தகையில்லா நீர்ச்சி முப்பு

மின்றிய சவ்வ டைப்பு

மூத்திரய் பாளை காசம்

கண்டித நீர்க்க டுப்பு

கதிரிடு இருமல் மூல

ஊண்டியைக் கடுத்து நொந்து

யோனியை யழைத்தும் ரோகம்

கடுப்புண்டாதல், உஷ்ணமாதல், நீர் சிறுத்துப்போதல், மூத்திரய்-பாளை, காசம், நீர்க்கடுப்பு, இருமல், மூலம்.

15. நீரது அடைக்கும் வாய்வு

நெருப்பென யெரிக்கும் கைகால்

பாரது பவுத்திர ரோகம்

பளைதறி லண்ட வாய்வு

பேரது எலும்பு ருக்கி

பெரும்பாடு காய ஙங்கள்

வாறிணி கொங்கை மாதே

மாங்கிஷ அடைப்புப் போமே

நீரடைப்பு, வாய்வு நெருப்பாய் தெரித்துப்போதல், கைகால் எரிதல், பவுத்திரநோய், அண்டவாய்வு, எலும்புருக்கி, பெரும்பாடு, மாங்கிஷ அடைப்புத் தீரும்.

16. சாத்தி ரப்-படி யமுது

சர்க்கரை தன்னைக் கொண்டால்

மூத்திரக் கிரிச்சங் காந்தல்

மெய்யெல்லாங் காயுங் காச்சல்

சூத்திரத் தோஷம் பில்லி

சூனிய வகைக ளெல்லாம்

மாத்திரைப் போதி ராமல்

வருந்தியே போகுங் கண்டாய்

சீந்தில் சர்க்கரையை மேற்சொன்ன மருந்தை உட்கொண்டால் மூத்திரகிரிச்சரம், காந்தல், உடல் எரிதல், காய்ச்சல், சூத்திரத்தோடம், பில்லி, சூனியம் ஆகியவை தீரும்.

17.பத்தியம் பசும்பால் நெய்

பரிவுள்ள அவரை நெத்தோல்

முத்திய துவரை முட்டை

முருங்கையின் பிஞ்சு கூட்டும்

புத்தியா யுப்பு மோரு

பாகிலை புளியு மாகா

நித்தியம் புணர்ச்சி வேண்டும்

நிலைபெற உரைத்த னூலே

பசும்பால், நெய், அவரை, முற்றிய துவரை, முட்டை, முருங்கைப்-பிஞ்சு சேர்க்கவும். உப்பு, மோர், பாகலிலை, புளி இவை ஆகாது.

18. தேமல், படர்தாமரைக்கு:

அருகொடு எருக்கு மஞ்ச

ளாம்பிளி அவுரி பீர்க்கு

முறியிலைக் கள்ளிச் சாற்றால்

முருகவே கவந்த எண்ணை

சிறுசோதி சிரங்கு தேமல்

தவளை மாமுந் தின்னும்

குருமுனி யருளிச் செய்த

குமங்குடித் தோர்கள் சொன்னார்

அருகு, எருக்கு, அவுரி, பீர்க்கு, ஆகியவற்றைக் கள்ளிச்சாற்றால் அரைத்து வேக வைத்த எண்ணெயை சிரங்கு, தேமல் ஆகியவற்றின் மீது பூச இவை தீரும்.

19. முன்னுடல் சூலைக்குத் தயிலம்:-

இஞ்சிச்சாறு மரைப்படியாம்

எலுமிச்சம் பழச்சாறு தானுமரி

வஞ்சிக் கொடியே னாரத்தம்

பழத்தின் சாறு தானுமரி

தஞ்சப் படியே விளக்கெண்ணெய்

தானே ரெண்டு படிகூட்டி

கொஞ்சப் படியே குன்றியிலை

கூட்டுஞ் சாறு மரைப்படியே

ஜி இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு இவற்றை வகைக்கு 675மிலி 675மிலி, நாரத்தம்பழத்தின்சாறு, 2.6லி விளக்கெண்ணெய், 675மிலி, குன்றியிலைச்சாறு சேர்த்துக் கொள்ளவும்.

20. நாக வல்லிச் சாறுழக்கு

நன்றாய் மிளகு ரெண்டுபலமீ

மாக வுள்ளி பலம்பத்து

அடவாத வசம்பு அஞ்சுபலம்

நேக வரைத்துத் தான்கூட்டி

நீதிப் படியே பார்த்திறக்கி

பாகத் தடவே தான்முழுகி

பரித்து நசியம் பண்ணுவதே

330மிலி, நாகவல்லிச்சாறு, 70கி, மிளகு, 350கி உள்ளி, 175கி வசம்பு, ஆகியவற்றை எடுத்து சாறூற்றி அரைத்துக் காய்ச்சி பக்குவத்தில் வடித்திறக்கிக் கொள்ளவும். தலையில் தேய்த்து குளிக்க வைத்து நசியமும் செய்தல் நல்லது.

21. பஞ்னு நசியம் எண்ணைதனைப்
பரிவாய்க் காதில் தானடைத்தால்
கஞ்னு மண்டைக் கனப்புவலி
நாலு வகையாம் ப்னிசமும்
விஞ்னு டங்காத் தலைத்தினவும்
மிகுந்த கபால சூலையதும்
பெண்ணை கேளு நீயுண்ட
தயிலந் தன்னைப் பேசிடவே

இவ்வெண்ணெயைக் காதில் பக்குவத்தில் ஊற்றி அடைக்க மண்டைக்கனம், நான்குவகைப் ப்னசம், தலைச்சொறி, கபாலச்சூலை ஆகிய நோய்கள் குணமாகும்.

22. சூடாய் நல்லெண்ணை யிருநாழி
சொல்னோம் ரோகணி நாலுபலமீ
தேடாய் வுள்ளி நாலுபலம்
சிவந்த ஏல மிந்துப்பு
வாடாய் கருஞ்சீர் கோஷ்டமுடன்
வகையோ ரொன்றுக் கோர்பலமே

நல்லெண்ணெய் 2.6லிட்டர், கடுகுரோகணி, 140கி, உள்ளி 140கி, ஏலம், இந்துப்பு, கருஞ்சீரகம், கோட்டம், ஆகியவற்றை வகைக்கு 35கி எடுக்கவும்.

23. திப்பிலி மிளகு மஞ்சள்
        தேவ தார மரமஞ்சளி
    சுக்குடன் விளா லரிசி
        சொல்லுங் கற்கடக சிங்கி
    செப்பிய அரத்தை நாங்கூழ்
        திகழ்சத சுப்பை நன்னாரி
    மெய்ப்பதாம் நிம்ப முத்து
        வேண்டிடுங் குன்றி வேரே

திப்பிலி, மிளகு, மஞ்சள், தேவதாரம், மரமஞ்சள், சுக்கு, விளாவரிசி, கற்கடகசிங்கி, அரத்தை, பூநாகம், சதகுப்பை, நன்னாரி, வேப்பங்கொட்டை, குன்றிவேர்.

24. முதியார் கூந்தல் முசுறுமுட்டை
        முதிர்ந்த வசம்பு கம்பிப்பிசின்
    சதியாஞ் சாய வேருடனே
        தானே வகைக்கோ ரெண்டுபலம்
    விதியாம் பச்சைப்பாம்பு கொழுப்பு,
        வேண்டுங் கீரித் தோல்பலங்கள்ல்
    மதியாய்க் கூட்டி அடுப்பில் வைத்து
        மானே பதத்தி லிறக்குவதே

முதியார் கூந்தல், முசுறுமுட்டை, வசம்பு, கம்பிப்பிசின், சாயவேர் ஆகியவற்றை வகைக்கு 70கி, பச்சைப்பாம்பின் கொழுப்பு, கீரித்தோல் இவற்றை வகைக்கு 9கி எடுத்து சேர்த்துக் கொள்ளவும். பொடிக்க வேண்டியவற்றைப் பொடித்துக் கலவையைக் கூட்டி காய்ச்சி பக்குவத்தில் இறக்கிக் கொள்ளவும்.

..13

25. என்னெயை வடித்துப் பின்பு

இயல்புடன் சிரசின் மேலில்

கண்ணில் படாமல் ரெண்டு

காதிலும் விட்ட டைத்துத்

திண்மமா யுள்ளுங் கொண்டு

தெளிவுடன் புகையைப் போட்டால்

எண்ணில்லா வாத சன்னி

இளகியே நழுவிப் போமே

என்னெயை வடித்துத் தலையின் மேல் வைத்து தடவி கண்ணில் படாத அளவுக்கு காதிலும் ஊற்றி அடைத்து உள்ளுக்கும் எடுத்துக் கொண்டால் வாத சன்னி தீரும்.

26. முக்கூட்டுச் சந்தனாதித் தயிலம்:

ஆரணி கயிலை மேவும்

இமர்கோன் வரத்தி னாலே

தாரணி முனிவன் சொன்ன

சயித்திய சந்த னாதி

வாரணி கொங்கை மாதே

மானிடர் தமக்குச் செய்ய

தாரணி உமையா ளீன்ற

கணபதி காப்புத் தானே

கயிலையில் வாழ்கின்ற இந்திரனின் வரத்தினால் அகத்தியன் கூறிய சந்தனாதித் தைலத்தை மானிடர்க்குக் கூறுகிறேன். அதற்கான காப்புப் பாடலை உமையாளின் மைந்தனான கணபதிக்குக் காணிக்கையாக்குகிறேன்.

27. எள்ளுட எண்ணெய் னாளி

இயல்விளக் கெண்ணை னாளி

தெள்ளிய பசுவு நெய்யும்

சிறத்தகவே னாளி கூட்டி

வெள்ளிய ஆவின் பாலும்

விபரமும் படியே ஆழ

தள்ளிய யிளநீர் தண்ணீர்

சென்றுவார் படியு மாறே

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், பசுநெய் ஆகியவற்றை வகைக்கு 1.3லிட்டர் பசும்பால் 7.8லிட்டர், இளநீர் 7.8 லிட்டர் எடுக்க. அனைத்தையும் ஒன்று சேர்த்து கலந்து கொள்ளவும்.

28. கைய்யான் தகரை குருந்தொட்டி

கசக்குஞ் சந்த மமுக்கிறா

மெய்யாங் கொடுப்பை சிறுக்கீரை

மிகவே தாளி நெல்லிக்காய்

செய்யாம் நாணல் அருகம்வேர்

சிவந்த தாமரை வளையமுடன்

மைய்யால் மருட்டும் புழுக்கையின்வேர்

மாதே தாழை விழுதாமே

கையாந்தகரை, குருந்தொட்டி, சந்தனம், அமுக்கிரா, கொடுப்பை, சிறுகீரை, தாளி, நெல்லிக்காய், நாணல், அருகம்வேர், சிவப்பான தாமரை வளையம், புழுக்கையின்வேர், தாழை விழுது

29. ஆமே சாறு வகைக்குவகை

அளவாய் ஒருபடி தான்கூட்டி

நாமே சொன்னோம் வேர்வகைகள்

நன்றாய் நிலப்பனை நன்னாரி

தாமே குமரி நீர்வள்ளி

தாமரை யல்லி செங்கழுநீர்

சோமோ நயன முகத்தாளே

சொல்வோம் காட்டு மல்லிகைவேர்

ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 1.3லிட்டர் எடுத்துக் கலந்து கொள்ளவும். நிலப்பனை, நன்னாரி, நீர்வள்ளி, கற்றாழை, தாமரை, அல்லி, செங்கழுநீர், காட்டுமல்லிகைவேர்.

30. முத்தக் காசு மிலாமிச்சு

முதிர்ந்த சீதா செங்கழுநீர்

உற்ற முல்லைக் கருப்பஞ்சார்

சொல்லு மருந்து ஒவ்வொன்று

-- -- வகைக்குவகை

சிறக்கப் பத்துப் பலங்கூட்டி

சுத்த நீரி விருநாழி

சுகமாய் விட்டுக் காச்சுவதே

கோரைக்கிழங்கு, இலாமிச்சு, சீதா, செங்கழுநீர், முல்லை, கரும்புச்சாறு ஆகியவற்றை வகைக்கு 350கி எடுத்து இடித்து43 லிட்டர் தண்ணீர் ஊற்றி கொதிக்க வைத்துக் கொள்ளவும்.

31. சுகமாய் காச்சி மறுபடியாய்ச்

சுருக்கிக் காச்சிச் சாறுதனில்

விதமாய்க் கலந்து ஒருவிறகில்

விளங்குந் தீபந்தானெரித்து

பதமாய் மூன்று படியாக

பதத்தில் குறுக்கி எண்ணையதில்

திரமாய்க் கலந்து அடுப்புதனில்

தீயே போட்டு எரித்திடுமே

காய்ச்சி மீண்டும் சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட சாறுகளையும் உடன் கலந்து ஒரு விறகினால் தொடர்ந்து எரித்து 3.9லி ஆக குறுக்கிக் காய்ச்சவும். பின்னர் எண்ணெய்களையும் சேர்த்து அடுப்பில் வைத்து எரித்துக்கொள்ளவும்.

32. சந்தனம் பலமே பத்து

தனியகில் பலமே பத்து

முந்தவே பொடியாய்ச் சீவி

முன்னங்கு படியே விட்டு

விந்தையாய்க் குறுக்கிக் காச்சி

மேவிடு படிமுன் றாக்கி

அந்தமாம் யிடையி னாளே

அதனுடன் கூட்டிக் கொள்ளே

சந்தனம், அகில் 35கி வகைக்கெடுத்து பொடியாக நறுக்கி 1.3லி நீரினைச் சேர்த்து கொதிக்க வைத்து குறுக்கிக்கொள்ளவும். 3.9லி ஆக சுருக்கி மேற்குறிப்பிட்ட எண்ணெயுடன் சேர்த்துக் கொள்ளவும்.

33. கூட்டி ஏலந் திரிகடுகு
    கோரோசனையுந் திரிபலையும்
நாட்டில் பச்சைக் கிளியூரல்
    நன்றாம் தாளிசை பத்திரியும்
சூட்டி மதுரம் செண்பகப்பூ
    சொன்னேன் கிராம்பு சாதிக்காய்
வாட்ட மணக்குங் கஸ்தூரி
    மஞ்ச ளாகு மரமஞ்சள்

ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோரோசனை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பச்சைக் கிளியூறல், தாளிசபத்திரி, அதிமதுரம், செண்பகப்பூ, கிராம்பு, சாதிக்காய், கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள்

34. கோட்ட மரத்தை செஞ்சாந்து
    குலாவும் பூலாங் கிழங்குடனே
வாட்டங் குன்றா யிலவங்கம்
    மற்ற சூடன் செவ்வள்ளி
தேட்டம் யேறிய மஞ்சட்டி
    தேவ தாரம் சடாமாஞ்சி
நாட்டம் பெரிய பெறனாயத்தை
    லவங்கப் பத்திரி நாகப்பூவே

கோட்டம், அரத்தை, செஞ்சாந்து, பூலாங்கிழங்கு, இலவங்கம், சூடன், செவ்வள்ளி, மஞ்சிட்டி, தேவதாரம், சடாமாஞ்சி, ஆகியவற்றையும் இலவங்கப்பத்திரி, நாகப்பூவையும் எடுக்க.

35. குறியாங் கொத்த மல்லிகையும்
நீதிப் புனுகு சட்டமுடன்
நெறியாஞ் சீரகம் தக்கோலம்
மாதிப் படியே நாகணமும்
மட்டாய் பச்சைக்கற்பூரம்
கோதிச் சொருகுங் குழலாளே
கூட்டாய் வகைக்கோ முக்கழஞ்சே

கொத்தமல்லியையும் புனுகுசட்டத்தையும் சீரகம், தக்கோலம், நாகணம், பச்சைக்கற்பூரம் ஆகியவற்றையும் வகைக்கு 15 கி எடுத்துக் கொள்ளவும்.

36. அரைத்திடும் பசுவின் பாலில்
அடவுடன் எண்ணை தன்னில்
கரைத்திடு மருந்தை யெல்லாம்
கமலமாய்த் தீயைப் போட்டு
எரித்திடும் பதந்தப் பாமல்
இறக்கியே சட்டி தன்னில்
விரித்திடும் ஓலை தன்னில்
மெல்லிய தாழம் பூவை
மேவியே இருத்துக் கொள்ளே

அனைத்துச் சரக்குகளையும், பசும்பாலில் அரைத்து எண்ணெய் தனில் கலந்து அடுப்பில்வைத்து இரண்டு விறகு கொண்டு எரித்துப் பக்குவத்தில் சட்டியில் வடிகட்டிக் கொள்ளவும். ஓலையுடன் கூடிய தாழம்பூவை அதில் போட்டு இருத்து மற்றொரு பாத்திரத்தில் ஊற்றிக் கொள்ளவும்.

37. இப்படி முக்கூட் டெண்ணெய்

இயல்புடன் சொன்னார் தன்னில்

மெய்ப்புடன் முழுகு வீரால்

வேர்வை கற்றாழை யூற்றம்

ஒக்கவே கைகால் காந்தல்

அஃதியாம் சுரங்கள் மேகம்

கொடுப்புங் குழலி னாளே

குன்மதாய்த் தீருந் தானே

இம் முக்கூட்டெண்ணெயைத் தலையில் தேய்த்து குளிக்க வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம், கைகால் காந்துதல், எலும்புச்சுரம், ஆகியவையும்

38. பித்தமும் எரிப்புத் தாஹம்

பெரும்பாடு கன்னெ ரிப்பு

சுற்றமும் நீரில் தோஉம்

தோன்றிடு மிருபத் தொன்றும்

மெத்தவே வாய்நீ றூறல்

மேடுங் காசப் பிறளைத் தீரும்

உள்ளதோர் கிரிச்சந் தாமும்

யோனியில் எரிப்புத் தீரும்

பித்தம், எரிச்சல், பெரும்பாடு, கன்எரிதல், தண்ணீரில் வருகின்ற தோடங்கள் 21, வாய் நீரூறுதல், காசம், முத்திர கிரிச்சரம், யோனியில் எரிச்சல் ஆகியவையும் தீரும்.

39. தாம்பிராணித் தயிலம்:

எள்ளெண்ணெய் படியே னாளி
எலுமிச்சம் பழத்தின் தாமும்
மெல்லவே பிழிஞ்சு இறுத்து
விபரமாய்ப் படியே னாலு
விள்ளவே காடி னாளி
விபரமாய்க் கூடக் கூட்டி
எண்ணையே கொள்ள வேண்டி
இயல்புடன் கெனவ்ளார் தாமே

1.3லி நல்லெண்ணெய், 5.2லி எலுமிச்சம்பழச்சாறும் 1.3லிட்டர் காடியையும் கலந்து கொள்ளவும்.

40. - - - - - -- --

நிக்குமே அவுரிச் சாறுமுரி
தங்கக் கோஷ்டம் சாதிக்காய்
சந்தனம் மதுரம் தக்கோலம்
மங்கைய ரதற்கே குங்குமப்பூ
மணக்கும் கஷ்த்தூ ரி கற்பூரம்
சங்கைப் படியே அழிஞ்சில்விரை
தானே மிளகு திரிபலையே

அவுரிச்சாறு 675மிலி, கோட்டம், சாதிக்காய், சந்தனம், அதிமதுரம், தக்கோலம், குங்குமப்பூ, மணம்நிறைந்த கஸ்தூ ரி, கர்பூரம், அழிஞ்சில் விதை, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்

41.அகத்திப் பூவு மிலாமிச்சு
அகிலு மிதரங் குருந்தொட்டி
செகத்தில் வகையோர் முக்கழஞ்சு
சேர அரைத்துத் தான்கலந்து
பதத்தில் எரித்துத் தான்வடித்து
வரிவாய் முழுகி யுள்கொண்டால்
பிதத்தும் பித்தம் நாற்பதுவும்
பயில்தனை னோய்கள் தானும்

அகத்திப்பூ, இலாமிச்சு, அகில், குருந்தொட்டி, ஆகியவற்றை வகைக்கு 15கி எடுத்து அரைத்துத் திரவங்கள் அனைத்தையும் சேர்த்து அடுப்பில் வைத்தெரித்து பக்குவமாய்க் காய்ச்சி வடித்துத் தலையில் தேய்த்து முழுகவும். உள்ளுக்குக் கொள்ளவும். 40வகை பித்மும் தீரும்.

42.பற்றிடும் புழுக்கள் எட்டும்
தயில்புனை மாதே சொல்வும்
சம்பீர மென்னும் -- --
-- -- --
தயிரமா முலகுக் கெல்லாம்
தானது சொன்னேன் கண்டாய்

புழுக்கள் எட்டும் நீங்குவதற்கு சம்பீரம் என்னும் தயிலத்தை உலகுக்கு எடுத்துக் கூறினேன். கேட்டுக் கொள்ளுங்கள்.

43.தாகத்துக்குக் கேசரிக் குடிநீர்.

ஆடா தோடை முருங்கைப்பட்டை

அமுக்கி ராவும் மாதளங்காய்

கூடா தூ தளை குளப்பாலை

குளிருஞ் சிற்றா மணக்கின் வேர்

வாடா கண்டங் கத்திரியும்

மணக்கும் வெள்ளைக் காக்கணம்வேர்

கோடா மிளகு சாரணைவேர்

குரிதாஞ் சங்கஞ் குப்பியுமே

ஆடாதோடை,முருங்கைப்பட்டை,அமுக்கிரா,மாதளங்காய்,தூ தவளை குளப்பாலை,சிற்றாமணக்கின்வேர், கண்டங்கத்திரி,வெள்ளைக்காக்கணம் வேர்,மிளகு, சாரணைவேர்,சங்கங்குப்பி.

44.எருக்கம் வேருந் துளசியுமாய்

இயல்பா முன்னை வேருடனே

வறுக்க மான தலைவிரிச்சான்

வகையோ ரொன்றுக் கஞ்சுபலம்

சுருக்க மாகத் தானிடித்துச்

சொன்னோம் பதக்கு நீரதனில்

உருக்க முடனே படிநாலாய்

சுருக்கிக் காய்ச்சி வடிகொள்ளே

எருக்கம்வேர்,துளசி,முன்னைவேர்,தலைவிரிச்சான் ஆகியவற்றை வகைக்கு 175கி எடுத்து இடித்து 103.லி தண்ணீரில் போட்டு 5.2லிஆகச் சுருக்கிக் காய்ச்சி கொள்ளவும்.

45.இந்தப் படியே தாளிசுருக்கி

இயல்பாய் நாலு படியிருத்துச்

சொந்தப் படியே தேங்காய்நெய்

சொல்லும் விளக்கெண்ணை நல்லெண்ணெய்யாம்

அந்தப் படியே வேப்பெண்ணெய்

ஆவின் நெய்யும் முசலிரத்தம்

சிந்தைப் படியே பன்றிரெத்தம்

சிறக்க வெள்ளாட்டு ரெத்தமுமே

குடிநீரை இறுத்து அதனுடன் 1.3லிட்டர் தேங்காயெண்ணையையும், வெப்பெண்ணையும், பசுநெய்யையும் முயல்ரத்தம், பன்றியின் இரத்தம் மற்றும் வெள்ளாட்டின் இரத்தத்தையும்

46.வகையோ ரொன்றுக் கொருபடியாம்

மானே கிடநாயந் தனில்தனை

திகையாம் நண்டு தனைப்பிடித்துத்

திவைத்த சாறு ரெண்டுபடி

மிகையாந் தேத்தம் பழத்தண்ணீர்

மிகவே ரெண்டு படிகூட்டி

தகையாம் நந்தி பூசனிக்காய்

சாறே கூட்டு மிருனாழி

வகைக்கு 1படியாக எடுத்துக் கலந்து கொள்ளவும். நண்டினை சாற்றினை2.6லி எடுத்துக் கலக்கவும்.தேற்றான் பழச்சாறு, பூசனிக்காய்ச்சாறு இவற்றை வகைக்கு2.6லி எடுக்க.

47.என்னையுங் கிடஃாயந் தாது

மிரத்தமு மொன்றாய்க் கூட்டி

திண்மமா முசுறு முட்டை

சேர்த்துகாங் குஞவும் நாழி

வன்மையாய்ப் பழமே தின்னும்

வவ்வாலில் கொழுப்பு ரெத்தம்

உண்மையாய் ஒன்றாய்க் கூட்டி

உமதியாய் அடுப்பு லேற்றே

மேற்கூறின எண்ணெயையும்,குடிநீரையும், இரத்தத்தையும் கலந்து கொள்ளவும்.முசுறு முட்டை,ஒநாகம் வகைக்கு 1.3லி, பழந்தின்னி வௌவாலின் கொழுப்பு இரத்தத்தைச் சேர்த்து கலந்து அடுப்பில் வைக்கவும்.

48. எத்தியே குக்கில் சிங்கி

ஈனியவா லுளுவை இந்து

தோற்றிய கருஞ்சீர் சுக்கு

சொல்லும் வெப்பாலை தானும்

மாற்றிய அரத்தை திப்பிலியும்

மருவிளா லரிசி கூட்டும்

நேத்தியா மிகவே பாலை

நிகர்திரி பலையுங் கூட்டே

குக்கில்,சிங்கி,வாலுளுவை,இந்து,கருஞ்சீரகம்,சுக்கு, வெட்பாலை, அரத்தை,திப்பிலி,விளாவரிசி,பாலை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும்.

49.வாராய் மானே கடைச்சரக்கு

வகையோ ரொவ்வொருபலமாய்ச்

சீரா யரைத்து எண்ணதனில்

சேரக் கலந்து தாளெரித்துப்

பாராய்மெழுகு பதம்போல்

பதமே வடித்துத் தானிறக்கி

நேராய் முழுகி உள்கொள்ள

நீற்கும் காசஞ் சுவாசமுமே

இவற்றை வகைக்கு 35கி எடுத்து அரைத்து எண்ணையில் கலந்து அடுப்பில் வைத்து எரித்து எண்ணெயைக் காய்ச்சி மெழுகு பதமாக வரும்போது வடித்து இறக்கிக் கொள்ளவும். உள்ளுக்குக் கொடுத்து தலைக்கு தேய்த்து குளிக்க காசம், சுவாசம் குணமாகும்.

50.காச சுவாச மருந்தீடும்

கனமா மீளை உன்மாந்தை

மாய மந்தார காசம்

மற்றுள்ள பித்த காசம்

தூயநீர்த் தோஷந் தானும்

சூழ்மும் பிணிகள் ளாவும்

சாயுமே வாத காசந்

தவிர்ந்திடுந் தவமுனி யுரைத்தனுலே

காசம், சுவாசம், மருந்தீடு ஈளை, உன்மாந்தை, மந்தாரகாசம், பித்த காசம், நீர்த்தோடம், சூழ்முகின்ற பிணிகள், வாத காசம் ஆகியவை தீரும்.

51 கையான் தகரையெண்ணெய், ஏரண்ட யெண்ணெய்

ஒக்ப்ப_வியுருதி_கரப்பூரனுக்கு

தையாள் தகரை சேந்தொட்டி

கசக்கும் பாகல் கருணொச்சி

மெய்யாந் துளசி வில்வம் நிம்பம்

வேண்டும் பொடுதலை கழற்சியிலை

செய்ய மிளகு தக்காளி

செருப்படி தகரை முருக்கிலையும்

மையார் குழலீர் வெள்ளருகு

மணக்குஞ் சங்கம் குப்பியுடன்

கையாந்தகரை, தேந்தொட்டி, பாகல், கருநொச்சி, துளசி, வில்வம், வேம்பு, பொடுதலை, கழற்சியிலை, மிளகுதக்காளி, செருப்படை, தகரை, முருக்கிலை, வெள்ளருகு, சங்கங்குப்பி

52. உடனே சங்கு பூவரசு

உடனே செப்பு நெருஞ்சியுடன்

திடனாஞ் சிவனார் நிம்பமுடன்

சிவந்த செங்கத் தாரிமுதல்

கடமா மிலுப்பை நிலவாகை

கதிரா பச்ச மஞ்சளிவை

சடமே ஙாமு மீருள்ளி

சார்தான் வகைக்கு ஆறறக்கே

சங்கு, பூவரசு, செப்பு நெருஞ்சில், சிவனார்வேம்பு, செங்கத்தாரி, இலுப்பை, நிலவாகை, கதிர்ப்பச்சை, மஞ்சள், ஈருள்ளி ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 165மிலி எடுத்துக் கொள்ளவும்.

53.மதுரந் திப்பிலி வெள்வுள்ளி
வசம்பு கடுக்காய் செஞ்சந்தம்
சதிரமான மிளகு சுக்கினொடு
சாதிக்காய் கிராம்பு நெல்லி
இதமாங் கருத்த சீரகமும்
இனிய தேவதாரத் தான்றி
பதமாய்க் கழஞ்சு ஒவ்வொன்று
பரங்கிப் பட்டை ஓர்பலமே

அதிமதுரம், திப்பிலி, வெள்குள்ளி, வசம்பு, கடுக்காய், செஞ்-சந்தனம், மிளகு, சுக்கு, சாதிக்காய், கிராம்பு, நெல்லி, கருஞ்சீரகம், தேவதாரம், தான்றி ஆகியவற்றை வகைக்கு 5கி, ஆகியவற்றை வகைக்கு பரங்கிப்பட்டை 35கி எடுக்க.

54.கொள்ளே விளக்கெண்ணை ஓர்படி
கூட்டி வடித்துத்தானிறக்கி
உள்ளே பத்து நாள்க்கொள்ளே
உப்பு கசப்பு புளிதவிர்த்து
சுள்ளாங் கரைப்பன் பதினாறு
சூலை சிரங்கு குஷ்டமுதல்
தள்ளே பிணிகள் விட்டோடும்
தரணி யறியச் சொன்னோமே

விளக்கெண்ணெய் 1.3லி எடுத்துக் கொள்ளவும். மேற்குறிப்பிட்ட மருந்துப் பொருட்களைச் சாறூற்றி அரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சி பக்குவத்தில் வடித்து இறக்கி அளவறிந்து 10நாட்கள் உட்-கொள்ளவும். உப்பு, கசப்பு, புளிப்பினை நீக்கி உட்கொள்ள 16வகை கரப்பான், சூலை, சிரங்கு, குட்டம் ஆகிய நோய்கள் குணமாகும்.

55. ஏலகுவு_சந்தனாதித்_தைலம்:_

எள்ளதி லெண்ணை னாழி
இனியகற் றாளை காடி
தெள்ளிய நெல்லிக் காயும்
சிறந்த புளியிலை தனஞ்சாறும்
வள்ளிசாய் வகைக்கு நாழி
மலர்க்காய்ச் சந்தனம் பலமஞ்சு
குளிய தேவ தாரமுடன்
சுருக்கா யிருபலங் கூட்டிக் கொள்ளே

நல்லெண்ணெய் 1.3லி, கற்றாழை, நெல்லிக்காய், புளியிலை, வள்ளி ஆகியவற்றை சாறுகளை வகைக் 2 1.3லி, காடியையும், அதே அளவெடுக்க. 175கி சந்தனத்தையும் 70கி தேவதாரத்தையும் சேர்த்துக் கொள்ளவும்.

56. கடையில் சரக்கு இருவகையும்
கருத்த தாய்ப்பாலில் தானரைத்து
விடையத் துடனே ஒருவிரகாய்
வெட்டி எரித்து வெந்திறக்கி
சடைமுடி யில்லா தேகறிபாவி
சுவாமி பாதந் தாளிணைத்து
நடையா லன்ன நடையாளே
நன்றா லெகு-சந்த னாதியிதே

கடைச்சரக்குகள் இரண்டையும், தாய்ப்பாலில் அரைத்து அதிவிடைய மரக்கட்டையை வைத்தெரித்து வெந்தவுடன் பதத்தில் வடித்து இறைவனின் பாதத்தில் வைத்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்வும். இதுவே சந்தனாதித் தைலம்.

57. இந்த சந்த னாதியெண்ணை

ஏய்நீ மூழ்கித் தாளிங்குடித்தால்

மந்த் முடைய காமாலை

மகோதரம் வெப்புப் பார்வைமுதல்

தொந்திப் புடைய பெருவயறு

தொண்டும் பித்த பாண்டுமுதல்

சொந்தப் படியே தானீர்ந்து

சுகமா யிருப்பார் கண்டீரே

இவ்வெண்ணையை உள்ளுக்கும் கொடுத்து தலையில் தேய்த்து குளித்து வர காமாலை, மகோதரம், வெப்பம், தொந்தி, பெருவயிறு, பித்தபாண்டு ஆகிய நோய்கள் தீரும்.

58. மகாபூதிகாழ் றுதலம்:

எருக்கம் வேரும் எருக்கம்பால்

இதமா மெருக்கிலை எருக்கம்பூ

சருக்கா மெருக்கங் காய்நொச்சி

சொல்லோங் கள்ளிப் பால்முதலாய்

கருத்தாம் வாத மடக்கியிலை

கருத்த ஆட்டுப் பால் கூட்டி

மருக்காம் நல்லெண்ணெய் வேப்பெண்ணை

வகையோர் நாழி கூட்டுவதே

எருக்கம்வேர், எருக்கம்பால், எருக்கிலை, எருக்கம்பூ, எருக்கங்காய், நொச்சி, கள்ளிப்பால், வாதமடக்கியிலை ஆகியவற்றையும் ஆட்டுப்பால், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய் ஆகியவற்றை வகைக்கு 1.3லி எடுக்க.

59. வகையோர் நாழி தானீகூட்டி
மணக்கு மிலுப்பெண்ணை தானுமக்கு
தகையாய் புங்கெண்ணை தானுமக்கு
தான விளக்கெண்ணை தானுமக்குத்
துகையா மதுர மரமஞ்சிள்
சொன்னோம் விளங்குஞ் சதகுப்பை
சுதையாங் கோஷ்டம் வலம்புரிக்காய்
சொல்னோம் திப்பிலி மூலமுமே

இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய், விளக்கெண்ணெய் ஆகியவற்றை வகைக்கு 325மிலி எடுக்க. அதிமதுரம், மரமஞ்சள், சதகுப்பை, கோட்டம், வலம்புரிக்காய், திப்பிலிமூலம்.

60. இந்தப் படியே கொடிவேலி
இயல்பாம் வெளிச்சிப் பிசினோம
மந்தப் படியே தேவதாரம்
அமந்த கஷ்த்தூ ரி மஞ்சளிவை
சொந்தப் படியே ஒரொன்று
சொன்னோ மொன்று கழஞ்சாக
முந்தப் படியே தானிறுத்து
முதலே வறுத்துப் போடுவதே

கொடிவேலி, வெளிச்சிப்பிசின், தேவதாரம், கஸ்தூ ரிமஞ்சள், ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து வறுத்துக் கலவையில் போட்டுக் கொள்ளவும்.

61. போடாய் காயம் வெள்ளைகெவுரி
புகமும் நாவி நெறிவிஉசமும்
வாடா யிரதஞ் கெந்தகமும்
மனோசிலை தாரம் வசம்புளிளி
தேடாய் வகையோ ரொருகழஞ்சு
சேர அரைத்துத்தாழிகலந்து
சோடா யெரித்துப் பதந்றக்கும்
சொன்னோம் பூதிகாத் தயிலமிதே

பெருங்காயம், வெள்ளைப்பாடாணம், கவுரி, நாபி, நிர்விடம், இரதம், கெந்தகம், மனோசிலை, தாரம், வசம்பு, உள்ளி ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து அரைத்துக் கலவையில் கலந்து அடுப்பில் வைத்தெரித்துப் பக்குவத்தில் இறக்கிக் கொள்ளவும்.

62. பூதிகாத் தயிலந் தன்னை
புகழ்ந்தநீ மேலே யிட்டு
நீதியாய் வெந்நீர் விட்டு
நிற்றமுள்க் னொள்வ் ராகில்
ஆதியாய் வந்த வாதம்
அறுபது மிருப தோடும்
சூதிகா வாய்வு சன்னி
சுகுசன்னி முதலாய்ப் போமே

இந்த பூதிகாத் தைலத்தை உடலின் மேலே பூசி பின் வெந்நீர் ஊற்றி விட வாதவகைகள் அறுபதும் குணமாகும். சூதிகா வாய்வு, சன்னியின் பல வகைகள் தீரும்.

63. மோர் எண்ணெய் (குளிர்ச்சிக்கு):

பார்தனில் மானி டர்க்கு

பலபல வியாதிக் கெல்லலம்

மோர்யெண்ணை தன்னை வைக்க

மோர்படி எட்டுக் கூட்டி

கார்தரு நல்ல யெண்ணெய்

கலப்பில்லா னாழி கூட்டி

நேருள்ள அரத்தை சுக்கு

நெறியுடன் கோஷ்டங் கூட்டே

பற்பல நோய்களுக்கு மோர் எண்ணெயைக் கொடுக்க நலம் பயக்கும். மோர் 10.4.லி, நல்லெண்ணெய் 1.3லி எடுத்துக்கொள்ளவும். அரத்தை, சுக்கு, கோட்டம் எடுக்க.

64. நெறியுடன் மதுர மஞ்சள்

நிலயிரு வேலி சந்து

குறியுள்ள லாமிச் சம்வேர்

குருந்தொட்டி மிகநன் னாரி

அறியுள்ள அரக்குத் திப்பிலி

அத்துடன் கடுகு ரோகணி

செறிவுள்ள முத்தக் காசு

சேரவே கூட்டிக் கொள்ளே

அதிமதுரம், மஞ்சள், இருவேலி, இலாமிச்சம்வேர், குருந்தொட்டி, நன்னாரி, அரக்கு, திப்பிலி, கடுகு, இராகணி, முத்தக்காசு ஆகியவற்றை வகைக்கு 35கி சேர்த்துக் கொள்ளவும்.

65. வகையோ ரொவ்முக் கோர்பலமாய்

மானே அரைத்து எண்ணெய்தனில்

சரிதாய்க் கலந்து வெய்யில் வைத்து

சுருக்காய் ரண்டு நாள்கழித்து

அத்தை யெடுத்து தான்வடித்து

அடவாய்ப் பூசித் தான்குளித்தால்

புதையாய்க் காந்து மஃகதிசுரம்

பொல்லா வுஃணம் போய்விடுமே

எல்லா வியாதிக் கிதகுருவாம்

எளிதாய்ச் சொன்னோ மிதைப்பாரே

சரக்குகளை அரைத்து நல்லெண்ணெயில் கலந்து வெய்யிலில் வைத்தவும். இவ்வாறு இரண்டு நாட்கள் வைத்து பின் எடுத்து வடி கட்டி உடலில் தேய்த்து குளிக்க வெப்பத்துடன் கூடிய அத்திசுரம்,வெப்பம் நீங்கும்.

66. அஞ்சுவகை எண்ணை தன்னை

அடவாய் ரெண்டரைப் படிகூட்டி

வெஞ்சொல் படியே கடைமருந்து

சேர்க்கும் வகையை செப்பக்கேள்

மிஞ்சப் படவே ரசகெந்தகம்

வேண்டு மனோசிலை துருசுசுக்கு

கஞ்சக் காந்தம் வசம்புபச்சை

கடுகு ரோகணி தான்கூட்டே

ஐந்துவகை எண்ணெய்களையும் வகைக்கு 3.9லி எடுத்துக் கலந்து கொள்ளவும்.இரச கெந்தகம்,மனோசில,துருசு, சுக்கு,காந்தம், வசம்பு,பச்சை,கடுகு ரோகணி சேர்த்துக் கொள்ளவும்.

67.இந்த வகைவேர் மருந்தையெல்லாம்
இயல்சேர் காட்டு முடக்கொற்றான்
தயவா லமுக்கிராச் சிறுகுறட்டை
மந்தக் கழச்சி இலைக்கள்ளி
- --- ---
மதிக்கும் வெள்வே லிலவமுமே

காட்டு முடக்கமுத்தான், அமுக்கிரா, சிறுகுறட்டை, கழற்சி, இலைக்கள்ளி, வெள்வேல், இலவம்

68.சிறுகு றட்டை கொடிவேலி
சிறுகு றிஞ்சா காக்கணம்வேர்
கருக ருத்த நரிவிளாத்திக்
காட்டு மிளகு சாரணையும்
சுருசு ருக்காய் வேர்வகைகள்
சொல்லும் வகையோ ரரைப்பலமாய்
சிறுசி றுத்த தனத்தாளே
சேர்த்தே யரைத்துத் தான்கட்டே

குறட்டை, கொடிவேலி, சிறுகுறிஞ்சா, காக்கணம்வேர், நரிவிளாத்தி, காட்டுமிளகு, சாரணை ஆகியவற்றின் வேர் வகைகள், இவற்றை வகைக்கு 35கி எடுத்து அரைத்து ஒன்று சேர்த்துக் கொள்ளவும்.

69. ஆடா தோடை கவுதும்பை

அரிசின் முகிழும் ஆதண்டை

பூடாங்கி கரிப்பான் நொச்சிவில்வம்

பொடிதலை செருப்படி தழுதாளை

வாடாஞ் சங்கங் குப்பியிலை

மடவாய்க் காட்டில் பேய்மிரட்டி

சோடாய் வகைக்கோர் சாறுவுரி

துளாவிச் சட்டி அடுப்பில் வையே

ஆடாதோடை, கவுதும்பை, ஆதண்டை, கரிப்பான், நொச்சி, வில்வம், பொடுதலை, செருப்படை, தழுதாழை, சங்கங்குப்பிலை, பேய் மிரட்டி ஆகியவற்றின் சாறுகளைப் பிழிந்து வகைக்கு 675மிலி எடுத்துச் சட்டியில் ஊற்றி அடுப்பில் வைக்க.

70. தயிலமே கொதிக்கும் போது

தான்பழந் தின்னி வவ்வால்

முழுசுறு ய்யைத் தின்னி

---வவ்வால் ரெண்டு

முகிலுமே யலகினாறே

தொல்குளித் தண்ணீர் நாளி

மயிலுட தூவல் பத்து

மருந்துடன் கூட்டிக் கொள்ளே

தைலமானது கொதிக்கும் போது பழந்தின்னும் வௌவால், ஈளைத்தின்னும் வௌவால் ஆகியவை வசிக்கும் குழித்தண்ணீர் 1.3லி, மயிலின் தோகை 10 ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

71. மருந்தெல்லா மொன்றாய்க் கூட்டி

மகிழ்ந்தநீ பதத்தி றக்கி

வருந்தவே மாதர் முன்பு

மகிழ்ந்தநீ னூப மீய்ந்து

பொருந்தவே குருவை நோக்கி

பொற்பதந் துணையே யென்று

அருந்தவே கழஞ்சி யென்னை

அடவுடன் கொள்ளு வீரே

அனைத்தையும் சேர்த்து காய்ச்சி பதத்தில் இறக்கி வடித்து வைக்கவும். குருவை வணங்கி 5கி உள்ளுக்குக் கொடுக்கவும்.

72. மேதையா வுள்ளுங் கொள்ள

மேவுமே பூசு வீரால்

வாதையால் வந்த தோஷம்

மடக்கியே கிடங்குங் கைகால்

ஆயிாய் வுந்த பிலீவி

சூனிய வகைக ளெல்லாம்

நீதியாய்த் தீர்ந்து நன்றாய்

நிலமையில் வாழ்ந்தி ருப்பார்

உள்ளுக்கும் கொடுத்து உடம்பின் மேலுக்கும் பூச வாதத்தால் ஏற்படும் தோடங்கள், கைகால் முடக்கம், பில்லி, சூனிய வகைகள் ஆகியவை தீர்ந்து நலலபடியாய் வாழ்வார்.

73. பித்த கேசரித் தைலம் :-

நாலு மரக்கால் காடிதனில்

நன்றாய் எலுமிச்சம் வேர்தனை

சீலத் துடனே பலம்பத்து

சிறகக் குறுணியதாய்க் காச்சி

தாலத் தாழை சாறுபடி

தனியே பசுவின் பால்நாழி

பாலத் தடங்கண் மாமயிலே

மகிழ்ந்தே நல்லெண்ணை நாழியதே

10.4லி காடியில் எலுமிச்சம் வேரை 350கி எடுத்து இடித்துப் போட்டு 5.2லி யாய்ச் சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும். தாழை 1.3லி,பசும்பால்1.3லி,நல்லெண்ணெய் 1.3லி உடன் கலந்து கொள்ளவும்.

74.சந்தனம் மதுரங் கோஷ்டம்

தரணியில் வெட்டி வேரும்

முந்திய லாமிச்சம் வேரும்

முத்த நன்னாரி வேரும்

மந்தன தேவ தாரம்

மதுரஅ கஸ்தூரி மஞ்சள்

வந்தன மருந்து தன்னை

வகைக்கிரு கழஞ்சு கூட்டே

சந்தனம்,அதிமதுரம்,கோட்டம்,வெட்டிவேர்,இலாமிச்சம்வேர், கோரைக்கிழங்கு,நன்னாரிவேர்,தேவதாரம்,கஸ்தூரிமஞ்சள், ஆகிய கடைச்சரக்குகளை வகைக்கு 10கி சேர்த்து இடித்துப் பொடித்துக் கொள்ளவும்.

75.சுட்டு மருந்துப் பொடிதன்னை
குணமா யெண்ணை தனில்போட்டு
வாட்டா மில்லா தடுப்பில் வைத்து
வாகாய் விறகு தனைமாட்டி
மூட்டுந் தீயைக் கனலெனவே
முத்தோர் சொன்ன வகைப்படியே
பாட்டினைப் படித்த கேசரியைப்
பதத்திலிறக்கத் தயிலமிடே

தூளான மருந்தை எண்ணெயில் போட்டு அடுப்பில் வைத்து விறகினால் அனலை மூட்டி நன்கு தீயை எழுப்பி காய்ச்சி பதமாகவுடன் தைலமாய் இறக்கிக் கொள்ளவும்.

76.இந்தப் பித்தக் கேசரியை
இயல்பாய் உள்ளுந்தான் கொண்டு
அந்தப் படியே மேலுமிட
அகன்றிடுங் கால்கை நடுக்கமுதல்
தொந்தப் படியே வந்தமுக
வாதஞ் சகல வாதமுதல்
யித்தப் படியே தீருமென்று
யியல்பாய் முனிவ னுரைத்தானே

இந்த பித்த கேசரி தைலத்தை அளவறிந்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் தடவிவிட கை,கால் நடுங்குதல்,வாத,பித்த, கபம் இவை தத்தமளவில் திரிதலினால் ஏற்படும்.முகவாதம் அனைத்து வாதங்களும் தீரும்.

77. கூழ்ப்பாண்ட கிருதம்: -

கூழ்ப்பாண்ட கிருதந் தன்னைக்

கிருபை யுடனே தாஞமாக்க

தாளா வண்ணஞ் செங்கழுநீர்க்

கோஷ்டஞ் சாத்திர வேதியுடன்

ஆழா யேலந் திப்பிலியும்

நெல்லிப் பருப்பு மதிமதுரம்

மாள வண்ணஞ் சமவறுப்பாய்

வகையோ றொன்று கரைப்பலமே

செங்கழுநீர், கோட்டம், சாத்திரவேதி, ஏலம், திப்பிலி, நெல்லிப்-பருப்பு, அதிமதுரம் ஆகியவற்றை இளவறுப்பாய் வறுத்துக்கொள்ளவும். ஒவ்வொன்றையும் வகை 17½கி அளவுக்கு எடுக்கவும்.

78. கொவ்ளாய் கருஞ்சீ ரகங்கிராம்பு

கட்டுங் கற்கடக சிங்கியுடன்

கள்ளார் பேரீச் சம்பழமும்

கடுகு ரோகணி சாதிக்காய்

உள்ளமகிழ் முந்திரி யப்பழமும்

ஒக்க அதனைப் பால்வார்த்து

வியனா யரைத்துக் கொள்வீரே

கருஞ்சீரகம், கிராம்பு, கற்கடகசிங்கி, பேரீச்சம்பழம், கடுகு-ரோகணி, சாதிக்காய், முந்திரிப்பழம் ஆகியவற்றை வகைக்கு 9கி எடுத்துப் பாலூற்றி அரைத்துக் கொள்ளவும்.

79. இகழாய் கொடுப்பை சிறுக்கீரை
　　ஏர்க்குந் தூதளை குருந்தொட்டி
　திகளச் சிற்றா மணக்கும்வேர்
　　சேர யெடுத்து உரித்ததனை
　நிகராய் வகையொவ் றஞ்சுபலம்
　　நிரம்ப நாளி நீர்விடுமே

கொடுப்பை, சிறுகீரை, தூதுவளை, குருந்தொட்டி, சிற்றாமணக்கு, ஆகியவற்றை வகைக்கு 175கி எடுத்து 1.3லி தண்ணீர் விட்டுக் கொள்ளவும்.

80. விடுமே புளலிறு னாழியதில்
　　வீராய்க் காச்சி படினாலாய்
　எடுநீர் வள்ளிக் கிழங்குதுவைத்
　　திரண்டு படியாக் கூழ்ப்பாண்டம்
　வடிநீர் நாலு படியாக
　　வளமே பசுவின் பாலதுவுந்
　துடியாய் னாலு படியாகத்
　　தோண்டி யெடுத்துக் கொள்வீரே

2.6லி தண்ணீருற்றி காய்ச்சிக் கொள்ளவும். 5.2லி வள்ளிக் - கிழங்கினைத் துவைத்த சாறு, கூழ்ப்பாண்டத்தைச் சேர்த்து காய்ச்சிய சாறு 5.2லி, பசும்பால் 5.2லி சேர்த்துக் கொள்ளவும்.

81.கொண்ட பசுவின் நெய்தன்னைக்

குறிப்பா யஞ்சில் பாதிகொண்டு

பண்டே யுள்ள சாறதனில்

பரிவாய்க் கலந்து கடைச்சரக்கை

விண்டே யரைத்து மருந்தையிட்டு

மெழுகு பதமாய் வடித்திறக்கி

கண்டே கரண்டி வெந்நீரில்

கலந்தே யுருக்கிக் கொடுப்பீரே

பசுநெய்யை 2.6லி எடுத்து சாற்றில் கலந்துகொள்ளவும். கடைச்சரக்குப் பொருட்களைச் சாறூற்றி அரைத்து அடுப்லிப் வைத்-தெரித்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.ஒரு கரண்டி வெந்நீரில் இந்நெய்யைக் கலந்து உருக்கிக் கொடுக்கவும்.

82.கொடுமே குவளை விப்புருதி

கொடிய யிரும லுளமாந்தை

வடுமே பிணியுங் கசனோவும்

வறச்சி யீளை யிவைநடுங்கி

படுமே மருந்து புகுந்தவுடன்

பந்தி யிடல்விட்டுப் பயந்தோடும்

விடுமே யுதவு மெய்யெனவே

மேலோ ருரைப்பார் கண்டீரே

குவளை, விப்புருதி,இருமல், உளை மாந்தை,காசநோய், ஈளை ஆகிய நோய்கள் இம்மருந்தால் தீரும்.இதுவே உண்மையான மருந்து என்று கூறுவர்.

83. ஆடாதோடைத் திருதம்:

ஆடாதோடைச் சார்பதக்கு
　　ஆவின் பாலது தாளபதக்கு
கோடா தரிய செங்கத்தாரி
　　கோஷ்டம் தாமரை வளையமுடன்
ஏடா சந்தனஞ் சம்பாறம்
　　இறக்கு மதவு மிலாமிச்சு
வாடா திராய்வேர் பாலை
　　நல்நில வேம்பு

ஆடாதோடைச்சாறு பசும்பால் ஆகியவற்றை வகைக்கு 10.5லி, செங்கத்தாரி, கோட்டம், தாமரை, வளையம், சந்தனம், இலாமிச்சு, திராய்வேர், பாலை, நிலவேம்பு

84. விரும்பி நாவ படிகொள்ளும்

　　வியனா யரைத்துக் கரைத்ததிலே
சுரும்பெ லணையீர் மெழுகுபதத்தில்
　　சுருளக் காச்சி வடித்ததிலே
கரும்பே கன்று சர்க்கரைதேன்
　　கலந்தே நக்க ரோகம்போம்

ஆகியவற்றை வகைக்கு 5.2லி எடுத்து அரைத்துக் கரைத்து அடுப்பில் வைத்து காய்ச்சி மெழுகு பதமாய் வரும்போது வடித்து சர்க்கரை, தேன் இவை இரண்டையும் அளவாய்க் கலந்து உள்ளுக்குக் கொடுக்க கீழ்கண்ட நோய்கள் தீரும்.

85.போமே இந்தப்பித்தசுரம்

பொலியும் வெப்பு மெலியுடனே

லாமே வறட்சி சேற்பனமும்

-- -- ---

அடுக்கு மிரும வுளமாந்தை

ஆமே சொன்னோ மிவையெல்லாம்

தடுக்கு மிந்த யோயெல்லாந்

தாமே பறந்து போய்விடுமே

பித்தசுரம்,உஷ்ணம்,வறட்சி, சிலேற்பனம், இருமல்,உளை, மாந்தை ஆகிய நோய்கள் மேற்குறிப்பிட்ட மருந்தால் குணமாகும்.

86.சம்புலக்கிருதம்:

நாவல் பட்டை தனையுலர்த்தி

நன்றாய் மூஊ பலம் நிறுத்து

மேவ யிருநாழி நீரளந்து

பின்னே பட்டையைத் தான்போட்டு

தீவாய் படியே ஒருவிறகாய்ச்

சிறுகப் பதக்கத் தான்காச்சி

ஆவுத் தயிர்நீர் நாலுபடி

அதுவும் நெய்யும் படிகூட்டே

நாவல்பட்டையைக் காயவைத்து 3500கி எடுத்து 43லி தண்ணீரை ஊற்றி அடுப்பேற்றி ஒரு விறகு கொண்டு பதமாய் எரித்து குடிநீரைக் காய்ச்சவும்.5.2லி தயிர்த்தண்ணீர், 1.3லி பசு நெய் இவற்றைக் குடிநீருடன் கலந்து கொள்ளவும்.

87. ஆரைச் சாறு நாலுபடி

அகத்திச்சாறு பூவும் பேரிச்சம்

பாரத் தாமரைத் தாதுடனே

பங்கம் பாளை வேரதுவும்

காரச் சர்க்கரை வசம்புள்ளி

கருத்தாய் வில்வச் சதையோமம்

சார முந்திரி அதிமதுரம்

தாவெப் பாலை னாகப் பூ

5.2லி ஆரைச்சாறு, அகதிச்சாறு, அகத்திப்பூ, பேரிச்சம், தாமரைத்தாது, பங்கம்பாளைவேர், சர்க்கரை, வசம்பும் உள்ளி, வில்வச்சதை, ஓமம், முந்திரி, அதிமதுரம், வெப்பாலை, நாகப்பூ.

88. முத்தக் காசு வறள்சுண்டி

முகில்கரு வாழைக் கிழங்குடனே

மெத்தக் கொட்டிக் கிழங்கதுவும்

வேண்டிய பன்றி மொத்தையுடன்

சித்தத் தாது மாதுளையின்

சிவந்த பிசிறு மாம்பாலும்

சுத்த வெள்ளி லோத்திரமும்

சுருக்காம் நாகப் பால்கூட்டே

முத்தக்காசு, வறட்சுண்டி, கருவாழைக் கிழங்கு, கொட்டிக் - கிழங்கு, பன்றி மொத்தை, மாதுளைச்சாறு, மாம்பால், வெள்ளி லோத்திரம், நாகப்பால் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

89. இப்படித் தகையோ றொன்று
இருகழஞ் சதுவே யாக
சொற்படி யரைத்துக் கட்டி
சுகமுதாய் நெய்யில் போட்டு
அப்படி யெரித்து நெய்யை
அடவுடன் பதந்தப் பாமல்
மெய்ப்புட லிறக்கிக் கொள்ளும்
மேவுசம் பூசு நெய்யே

மேற்குறிப்பிட்ட கடைச்சரக்குகளை வகைக்கு 10கி எடுத்து அரைத்து அவ்விழுதை, நெய்யில் கலந்து கொள்ளவும். அடுப்பில் வைத்-தெரித்து காய்ச்சி பக்குவத்தில் வடித்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசிக் கொள்ளவும்.

90. இதுவே கரண்டி நெய்யாக
இருபத் தஞ்சு நாள்கொள்ள
மதுவே போலத் தான்மணத்தும்
மகிழ்ந்தே கலங்கும் பெரும்பாடு
அதுவே மேக மெலும்புருக்கி
அமையும் வறச்சி பித்தமுதல்
முதுவே கடுத்து ரெத்தம்விழும்
மூல வாய்வுந் தீர்ந்திடுமே

கரண்டி அளவு இந்த நெய்யை கொடுக்கவும். இருபத்தைந்து நாட்கள் தொடர்ந்து கொடுக்க பெரும்பாடு, மேகம், எலும்புருக்கி, வறட்சி, பித்தம், மூலவாய்வு ஆகியவை தீரும்.

91. அமுர்த சஞ்சீவி நெய்
உத்த பசுவின் நெய்நாழி
உகந்த நீர்வள்ளி அஞ்சுபலம்
சித்த அவரைக் கிழங்கதுவும்
சீராய் அஞ்சு பலங்கூட்டு
முத்த சீந்தி யஞ்சுபலம்
முதிர்ந்த பசும்பால் தானாளி
இந்தப் படியே மூவகையும்
இதமாய்க் காச்சிக் கொள்வீரே

பசுநெய் 1.3லி, நீர்வள்ளி 175கி,175கி அவரைக்கிழங்கு, சீந்தில் 175கி பசும்பால் 1.3லி,எடுத்துக் கொள்ளவும்.பாலில் மேற்சொன்ன மூன்று சரக்குகளையும் சேர்த்து காய்ச்சிக் கொள்ளவும்.

92. சந்தனம் மதுரம் ஏலம்
தனிநெல்லி முந்திரி பேரீச்சம்
விந்தை சீரகமுஞ் சீனி
வேண்டுஞ் சர்க்கரை கற்கண்டு
சொந்தமாய் வகை ஓரொன்று
சொல்படி பலமே கூட்டி
அந்தநற் பசுவின் பாலில்
அரைத்திடு மருந்தைத் தானே

சந்தனம்,மதுரம்,ஏலம்,நெல்லி,முந்திரி,பேரீச்சம்,சீரகம், சீனி,சர்க்கரை,கற்கண்டு ஆகியவற்றை வகைக்கு 35கி எடுத்துப் பசும்பாலில் சேர்த்தரைத்துக் கொள்ளவும்.

93. அரைத்திடு மருந்தை யெல்லா
மடவுடன் நெய்யில் சேர்த்து
எரித்திடு மொருவி றகில்
இயல்புடன் பதத்தி றக்கி
புரிந்திடும் நெய்யே கொள்ள
புளிவகை அப்புத் தள்ளி
கலந்திடும் நவபா சாணங்
கலந்ததோர் முறிவும் போமே

மேற்கூறிய அனைத்து மருந்துகளை அரைத்து நெய்யில் கலந்து ஒரு விறகு கொண்டு எரித்து பக்குவத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும். புளியும் உப்பும் தள்ளிவிடவும்.

94. ஈரலு .....னொந்து
இரதமே முறியும் வெக்கை
நேரது கையுங் காலும்
நெருப்பென்ன யெரியு முஷ்ணம்
சீறது நீர்க்க டுப்பு
செரித்திடுங் கிரிச்சம் பாளை
ஆறுமே புனையு மாதே
இமுர்த சஞ்சீவி நெய்யே

ஈரல் வலித்தல், கை, கால் வலித்தல், வெப்பம் அதிகமாதல், நீர்க்கடுப்பாதல், கிரிச்சம்பாளை, ஆகியவை அமிர்த சஞ்சீவி நெய்யால் குணமாகும்.

95. கோமியு நெய் பூண்ணும்_வகுத்

ஆவி நெய்யும் படியரையாம்

அதுவின் பால மரைப்படியாம்

மேவுங் கோமியந் தானரியாம்

மிகுந்த தயிருந் தானரியாம்

தாவுங் கள்ளிப் பாலழக்கு

தயவாய் சிறுதம்பை வேர்ப்பிடிங்கி

கூவுங் குயில்போல் மொழியாளே

கட்டி ரிருபலந் தானரைத்தே

பசுநெய், பசும்பால் வகைக்கு 675மிலி, கோமியம், தயிர் வகைக்கு 675மிலி கள்ளிப்பால் 325மிலி, சிறுதும்பை வேர் 70கி எடுத்துக் கொள்ளவும். அனைத்தையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

96. தானே கட்டி வெந்திறக்கித்

தயவாய் வடித்து நெய்தன்னை

மானே நித்த முருகழஞ்சு

மனதின் படியே தான்கொள்ள

நானே சொன்னேன் காமாலை

நன்றாய் வாய்வு பாண்டுமுதல்

போனே என்ற போகிவிடும்

புலவ் ரறிந்து கொள்வீரே

விழுதை அடுப்பிலி வைத்தெரித்து பக்குவத்தில் வடித்த நெய்யை 10கி உள்ளுக்குக் கொடுக்க காமாலை, வாய்வு, பாண்டு ஆகிய நோய்கள் தீரும்.

97. சிந்தாதி லேகியம்:

கடவுளார் பாதந் தன்னைக்
  கருதியே மகிழ்ந்து போற்றும்
திடமுடன் முனிவன் சொன்ன
  சிந்தாதி லேகியத்தை
அடவுடன் பதந்தப் பாதல்
  அனுப்பானப் படியே கொண்டால்
சடமது ஊழிக் காலந்
  தரணியில் வாழ்வ தாமே

முனிவர்கள் கூறிய சிந்தாமணி லேகியத்தை அனுபானத்தை மாற்றி நோய்களுக்கேற்றவாறு கொடுக்க உலகத்தில் பல நூறு வருடங்கள் நோயின்றி மக்கள் வாழலாம்.

98. கடுக்காய்த் தோல்நா லஞ்சுபலம்
  கருதும் புளியிலை தானிரு ளி
முடுக்கா மஞ்சள் முள்ளிநெல்லி
  முதிர்ந்த சிவதை அவுரிவேர்
அடுத்காஞ் சாரடை பெருங்குமிழிவேர்
  அமந்த காட்டு மல்லிகையும்
தொடுக்காங் கொடிவேலி நாயுருவி
  தூ தளை வில்வப் பழங்கூட்டே

கடுக்காய்த்தோல் 700கி, புளியிலை, மஞ்சள், முள்ளி, நெல்லி, சிவதை, அவுரிவேர், சாரணைவேர், பெருங்குமிழ்வேர், காட்டுமல்லிவேர், கொடிவேலி, நாயுருவி, தூதுவளை ஆகியவற்றின் வேர்கள், வில்வப்பழம், எடுத்துக் கொள்ளவும்.

99.கூட்ட நிம்பஞ் சங்கம்வேர்க்

கொடிய முன்னை பாதிரிவேர்

நாட்டில் பெரிய பெருவாகை

நன்றாங் கண்டங் கத்திரிவேர்

காட்டில் பெரிய வில்லைவேர்

கருதும் முள்ளி நெருஞ்சில்வேர்

கூட்டுஞ் சிந்த மல்லியுடன்

சுகமாம் பேரா மல்லியுமே

வேம்பின்வேர், சங்கன்வேர், முன்னை, பாதிரி, பெருவாகை, கண்டங்கத்திரிவில்லை, முள்ளி, நெருஞ்சில், சிற்றாமல்லி, பேராமல்லி ஆகியவற்றின் வேர்கள்.

100.சிற்றா முட்டி செங்கொட்டை

சிவனார் வசம்பு பேய்முசுட்டை

முத்தக் காசு இவை கூட்டி

முடிகி ஒவ்வொன்று பலம்பத்து

சுத்தக் கிட்டம் நூறுபலம்

சுகமா மிரும்பு நூறுபலம்

எத்தப் படியே தான்துவைத்து

எட்டு மரக்கால் நீரிலிடே

சிற்றாமுட்டி, செங்கொட்டை, சிவனார் வேம்பு, வசம்பு, பேய்முசுட்டை, முத்தக்காசு எனும் கோரைக்கிழங்கு, ஆகியவற்றை வகைக்கு 350கி, இரும்புகிட்டம் 3500கி, ஆகியவற்றை எடுத்து நன்கு இடித்து 41.6லி தண்ணீரில் போட்டுக் கொள்ளவும்.

101.ஆவின் கோமிய மிருதாணி

ஆகக் கூட்டிக்கிடுசாயமதாய்

மேவும் பதக்காய்த் தான்காச்சி

மெல்ல இருத்து வடிகொண்டு

நாவுக் கினிய பனைவெல்லம்

நன்றாய்ப் பத்துப் பலங்கூட்டி

கூவுங் குயில்போல் மொழியினளே

கூட்டீ ரின்னஞ் சிலமருந்தே

பசு கோமியம் 43லி சேர்த்து குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும்.104.ல யாய்ச் சுருக்கி இறுத்து வடிகட்டிக் கொள்ளவும். பனைவெல்லம் 350கி சேர்த்துக் கொள்ளவும்.

102.மஞ்சள் கொடிவேலி அன்பனைங்காய்

மகிழம் பேய்ச்சுரை ஒட்டுடனே

மிஞ்சப் பாலரசம் பட்டையது

மிகுந்த புளியம் பட்டையதாம்

கொஞ்சப் படியே கீரைத்தண்டு

சுட்டு மென்சு சர்க்கரைமுதலாய்

தஞ்சப் படியே இவைசுட்டு

சாம்பல் நாலு படிகொள்ளே

மஞ்சள்,கொடிவேலி,பனங்காய்,பேய்க்குரைசடு, அரசம்பட்டை, புளியம்பட்டை,கீரைத்தண்டு, சர்க்கரை ஆகியவற்றை எடுத்துச் சுட்டு 5.2லி அளவாக சேர்த்துக் கொள்ளவும்.

103.கொள்ளே நாலு படிசாம்பல்
கூட்டிக் கலந்து நீர்பதக்கு
சுள்ளக் காச்சி னாலொன்றாய்
சுகமாய் வடித்து வடிகொண்டு
தள்ளாய் கறிகந் தனைத்தள்ளி
தானே முந்தின கிஊாயத்தில்
உள்ளே கலந்து இருவகையும்
ஒன்றாய்க் கூட்டி அடுப்பில் வையே

இச்சாம்பலுடன் 10.4லி தண்ணீர் சேர்த்து காய்ச்சி நாலுகி-லொன்றாய் சுருக்கி வடித்துக் கொள்ளவும்.அதிலுள்ள கறிகத்தை நீக்கி விட்டு அக்குடிநீரை மேற்குறிப்பிட்ட குடிநீருடன் சேர்த்து கலந்து அடுப்பில் வைத்து காய்ச்சிக் கொள்ளவும்.

104.நாரத்தம்பழச்சாறு நாலுபடி
நல்ல கரிப்பானி்நாலுபடி
நேரொத்த சாரடை இலைச்சாறு
நிகரும் பிரமி இலைச்சாறு
ச்ராமேனி இலைச்சாறு
சிறுகஸ் தூரி சாறுங்கொள்
கூறுஞ் சங்கிலை இஞ்சிசாறு
குருகு மிஞ்சிச் சாறுடனே

நாரத்தம்பழச்சாறு,கரிப்பான், சாரணை,பிரமி,குப்பைமேனி, கஸ்தூரிசங்கிலை,இஞ்சி ஆகியவற்றைன் சாறுகளை வகைக்கு 2.6லி எடுக்கவும்.

105.வகையோ ரொன்றுக்கு ரெண்டுபடி

மணக்கும் பசுவின் நெய்நாழி

இதமாய் நல்லெண்ணை தானாழி

இயல்பாய்க் கூட்டித்தான் கலந்து

பதமாய்க் காய்ச்சித் தான்கிண்டி

பருவத் துடனே அரைப்பொடியை

விதமா யுரியப் பொடியதின்மேல்

வீராய்க் கிஉகாயந் தனில்கூட்டே

மேற்கூறிய சாற்றுடன் 1.3லி பசுநெய்யை நல்லெண்ணையையும் சேர்த்து கலந்து அடுப்பில் வைத்து காய்ச்சி கிளறி அரப்பொடியையும் சேர்த்து குடிநீரையும் கலந்து கொள்ளவும்.

106.திரிபலை ஏலம் நாமம்

திரிகடு தேவ தாரஞ்

வெறியுள்ள சிங்கி ரெண்டு

சீரகம் வங்க பத்திரி

அறிவுள்ள விளங்க மிந்து

அதிகமாம் லவங்கப்பட்டை

குறியதாய் மூலந் தானும்

கூட்டிநீர்ப் பலமோ ரொன்றே

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஏலக்காய், திரு-நாமப்பாலை, சுக்கு, மிளகு, திப்பிலி, தேவதாரம், சிங்கி எனும் மான் கொம்பு, சீரகம், வங்கபத்திரி, விளங்கம், இந்து, இலவங்கப்பட்டை, மூலம் ஆகியவற்றை வகைக்கு 35கி எடுக்கவும்.

107. இந்தப் படியே பொடிபண்ணி

இதமாய் லேகியந் தனில்கலந்து

முந்தப் படியே பதமானால்

முகிழதத் துடனே தானிறக்கி

மந்தத் துடனே ஆறியபின்

மகிழ்ந்தே விருநாழி விட்டு

விந்தைப் படியே நெல்புடத்தில்

வியனாய் வைத்தெடு மாதமொழிரே

அனைத்தையும் பொடித்து மேற்கூறிய இலேகியத்தில் கலந்து காய்ச்சி பக்குவத்தில் இறக்கி வைக்கவும். ஆறிய பிறகு எடுத்து 3/4 மணி நேரம் கழித்து நெல்லிளிடை வைக்கவும். ஒரு மாதம் கழித்து அதினை எடுத்துப் பார்க்கவும்.

108. எடுமே கழித்த பின்பு

இதமாய் வெருகடி தான்கொள்ள

கெடுமே ஆறு வகைப் பாண்டு

கெட்டே ஓடுங் காமாலை

படுமே ஒன்பது வகைவீக்கம்

பயித்திய குன்ம மெட்டுவகை

விடுமே மகோதரம் எட்டுவகை

விட்டே ஓடும் விப்பிருதி

மூவிரலளவு எடுத்து உட்கொள்ள பாண்டு வகைகள் ஆறும் காமாலையும் ஒன்பது வகை வீக்கமும் பயித்தியமும் எட்டுவகை குன்மமும் எட்டுவகை மகோதரமும் விப்புருதியும் குணமாகும்.

109. அந்த்ர வாய்வுப் ப்சம்

அண்டத்தி லெழுந்த வாய்வும்

மந்தமாம் வாய்வு சோகை

மைக்கலம் பயித்திய தோஉஷம்

சிந்தையில் கனவு விக்கல்

செருமியே இருமல் தோஉஷம்

தந்திர மாக மெள்ளச்

சடத்தைவிட் டொளியுந் தானே

அந்தரவாய்வும், அண்ட வாய்வும் மந்தமான வாய்வும் சோகையும் பயித்தியதோடமும் விக்கல் இருமல், தோடம் ஆகிய நோய்களும் குணமாகும்

110. பத்திய முப்பு மோரும்

பலவகை கறிக ளாகா

நித்தியம் பசுவின் பால்நெய்

நேரிய துவரை கூட்டி

சித்தியாந் திங்க ளொன்று

திடமுமே தின்பா ராகில்

புத்தியாம் பிணிக ளோடும்

பூவுல கறியச் சொன்னோம்

உப்பும் மோரும் பலவகையான காய்கறிகளும் விலக்க வேண்டியவை பசும்பால், நெய், துவரம்பருப்பு ஆகியவற்றை சேர்த்து ஒரு மாதம் உட்கொள்ள மேற்சொன்ன நோய்களும் மற்றும் பலவும் குணமாகும்.

111. திரிபலாதி லேகியம்:

உவருந் தண்ணீ ரொடீபடியி
    லுகந்த தேங்காய் தனைத்திருகி
பருவத் துடனே தான்பிழிந்து
    பாலா யரைப்படி யாய்க்காய்ச்சி
கருமத் துடனே திரிகடுகு
    காயந் திரிபலை சேர்மருப்பு
தருமத் துடைய வெள்ளுள்ளி
    சாரணை வசம்பு முருங்கைப்பட்டை

ஒப்புத் தண்ணீரில் தேங்காயைத்துருவி பாலெடுத்து 675மிலி அளவு காய்ச்சிக் கொள்ளவும். சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெள்ளுள்ளி, சாரணை, வசம்பு, முருங்கைப்பட்டை

112. இந்தப் படியே புகையூரல்
    இவையோ டொக்க நேர்வாளம்
சிந்தைப் படியே வகையொன்று
    சீராய்க் கட்டு மோர்கழஞ்சு
அந்தப் படியே தானரைத்து
    அடவாய்ப் பாலில் தான்கலந்து
கந்த மலர்ப்பூங்குழலாளே
    கலவீறையள் பலம்பனை வெல்லமே

புகையூறல் ஆகிய மருந்துப் பொருட்களை வகைக்கு 5கி எடுத்துக் கொள்ளவும். இவை அனைத்தின் எடைக்குச் சம அளவு நேர்வாளத்தை எடுத்தரைத்துப் பாலில் கலந்து கொள்ளவும். 175கி பனை வெல்லத்தையும் சேர்த்து பாகாய்க் காய்ச்சிக் கொள்ளவும்.

113. பாகாய்த் திரிபலை லேகியத்தைப்
பதத்தி லிறக்கிப் பாக்களவு
வாகாய்க் கொண்டு வெந்நீரை
மானே குடிக்க வல்லீரலைப்
போகா வாய்வு திரட்சி வெற்பு
பொல்லாக் கெண்டை பிற்றகுன்மம்
சூதாம் வயத்தில் வலிமுதலாய்த்
தலைந்தே ஓடுங் கண்டீரே

இந்த லேகியத்தைப் பதமாக இறக்கி 2.2கி எடுத்து உட்கொண்டு வெந்நீரைக் குடிக்க வாய்வு திரட்சி கெண்டை, குன்மம், வயிற்றுவலி ஆகியவை குணமாகும்.

114. கடுக்கா யொன்று தான்றிரெண்டு
கருதும் இநல்லி நாலுபலம்
மடுக்க யிடித்துத் தூள்பண்ணி
அதனில் வெருகடி தான்கொள்ள
முடுக்காம் பித்தம் நெய்யில்போம்
முற்றுஞ் சிலேற்பனந் தேனில்போம்
தடுக்காம் வாதம் விளக்கெண்ணெயில்
துணிந்து கொள்ளுங் களிந்திடுமே

கடுக்காய் 35கி, தான்றி 70கி, நெல்லி 140கி எடுத்து இடித்துப் பொடித்து மூவிரலளவு உட்கொள்ளவும். இச்சூரணத்தை நெய்யில் கலந்து உட்கொள்ள பித்தம் குணமாகும். தேனில் கலந்து உட்கொள்ள சிலேற்பனம் தீரும். விளக்கெண்ணெயில் கலந்து உட்கொள்ள வாதம் குணமாகும்.

115.முத்தப் பிரண்டை பொடிகுமணி

முதிர அரைத்துக் குகைபண்ணி

சித்தத் துடனே மிளகோமம்

சிறந்த உப்பு மூவகையும்

சத்தத் துடனே மூவுழக்கு

சருக்கா யிடித்து அதில்செலுத்தி

நத்தைப் பிலாவி நிலைபொதிந்து

நன்றா யெருப்புட மதில்போடே

பிரண்டை பொடி 5.2லி எடுத்து அரைத்துக் குகை செய்து கொள்ளவும். மிளகு, ஓமம், உப்பு இவை மூன்றையும் 975கி எடுத்து இடித்து மேற்சொன்ன பொடியுடன் சேர்த்து புடத்தில் வைத்தெடுக்கவும்.

116.போடே யெருவி லொருசாமம்

பொறுத்தா லெடுத்துத் தாளுக்கிச்

சூடே யேறித் தண்ணீரில்

சுகமாய் வெருகடி தான்கொள்ள

ஊடே கலக்கு மேல்வாய்வு

உஷ்ண வாய்வுக் குன்மமெட்டும்

போடே ஓடும் சத்திகுன்மம்

பதறியோடுமங் குன்ம வாய்வதுவே

3மணிநேரம் வைத்தெடுத்து பின் ஆற வைக்கவும். வெந்நீரில் இப்பற்பத்தைக் கலந்து கொடுக்க வாய்வு, எட்டுவகைக் குன்மம், சத்தி குன்மம், ஒடுங்குன்மம் ஆகியவை குணமாகும்.

117. உஷ்ணத்துக்கு:

அருக்கஞ் சாறு நாநாழி
        அதிமதுரம் யெங்க ழஞ்சு
நறுநெய் னாழி பால்நாழி
        நல்ல பாலை முகிழரைத்துக்
குருகவே வெந்து நெய்கொள்ள
        கோடா கோடி உஷ்ணங்கள்
வெறுமை கொண்ட வேசியன்போல்
        விட்டுப் போகுங் கண்டீரே

அருகம்புல்தாறு 5.2லி, அதிமதுரம் 40கி, நெய் 1.3லி, பால் 1.3லி எடுத்து நன்கு அரைத்துஅடுப்பில் வைத்து காய்ச்சிக் கொள்ள பலவகை செப்பங்கள் குணமாகும்.

118. சந்தானதித் தயிலம்:

சகல மெகும் வெட்டை இருமலுக்குமாம்

மாதரிட மோகம் வருந்தினால் மானிடரே
தாதுகெடும் நீரிழிவு தான்தொண்டும்-போதவே
காந்த லெடுத்து கனகனத்துக் கஞ்சித்தண்ணீர்
வாங்கியுடல் மெத்த வுருந்துமே-பாங்கியரே
வல்லோர்க்கு நல்லபயன் வலியசத்த னாதிதன்னை
வல்லோரே வைத்துக்கொள் மானிலத்தில்-யெல்லோர்க்கும்
அம்மை யுமையாளை அரங்கை யிலைகுறித்த
செம்மையுள்ள வாகடத்தைச் செப்பக்கேள்-நம்மை பெறும்

பெண்களிடம் உள்ள மோகத்தினால் நீரிழிவு ஏற்படும். உடலில் வெப்பம் அதிகமாகி காய்ச்சல் உண்டாகும். உலகிலுள்ளோர்க்குப் பயன் பெறும் பொருட்டு சந்தனாதித் தைலத்தைக் கூறுகிறேன்.

..60

119.சந்தமொடு கோஷ்டம் சதாவெறி நன்னாரி
முந்திய பொன்னாங்காணி முத்தமுடன்-அந்தகிலம்
வில்லமுடன் சந்தில் விலாம்பிச்சு வெட்டிவேர்
செல்லு மற-வி தமுடன் -வில்லவரே
ஒன்றுங் குறையாமல் ஓர்பலங்கொண் டோரகத்தில்
சென்றிரு நாணின்றிலே செலுத்தி-நன்றாகக்
காய்ந்து இருநாழிக் கசாயத் தளவாக
வாய்த்த யெண்ணெய் பாலிளநீர்-வாய்த்ததற்பின் தேந்தொரு

சந்தனம்,கோட்டம்,சதாவேரி,நன்னாரி,பொன்னாங்காணி, கோரைக்கிழங்கு, வில்வம்,சீந்தில், விலாமிச்சு, வெட்டிவேர்,அரவிந்தம், ஆகியவற்றை வகைக்கு 35கி எடுத்து 21.5லி தண்ணீரில் போட்டு காய்ச்சி கொதிக்க வைத்து 2.6லிஆக குறுக்கிக் கொள்ளவும்.எண்ணெய்,இளநீர், பால் இவற்றையும் எடுத்துக் கொள்ளவும்.

120. சந்தனங்க ளெல்லாமல் சாதிக்காய் கோஷ்டமுடன்
வந்த வசுவாசி மகரம்பூ-பைந்தொடியாய்
பச்சிலை கச்சோலம் பருஞ்சட்டி மாஞ்சியுடன்
நிச்சயமாய் செங்களநீர் செம்பகப்பூ -அச்சமற
யேல மிலவங்க மிருவேலி சித்தரத்தை
வால தேவதாரஞ் செவ்வள்ளியுடன்-கோலமுள்ள
தக்கோலமுங் கடுகு ரோகணியும் பூலாவேர்
சொல்சாதிப் பத்திரியும் மேல்பத்திரியுங் -கரப்பான்
கிள்ளை யுரையுங் குரோசாணி னாகப்பூ
வெள்ளி-லோத்திர மதிமதுரம் வேதிக்கல்-நல்ல விளால்

சாதிக்காய்,கோட்டம்,வசுவாசி, மகரம்பூ, பச்சிலை, கச்சோலம்,சடாமாஞ்சில், செங்கழுநீர்,செண்பகப்பூ,ஏலம்,இலவங்கம், இருவேலி,சிற்றரத்தை, தேவதாரம்,செவ்வள்ளி,தக்கோலம்,கடுகுரோகணி, பூலாவேர்,சாதிபத்திரி, குரோசாணி,நாகப்பூ, வெள்ளிலோத்திரம், அதிமதுரம் எடுக்கவும்.

121.வெப்பாலை யுந்தகரம் வெட்டி சந்தனமும்
ஒப்பாய்க் களஞ்சுநிரை ஓரொன்று-தப்பாதே
தாளி-கொடுப்பை நல்ல சாஸ்திர வேதியுடன்
வீழிமுருக்கு னொச்சி வேர்க்குமரி-புளியாரை
குன்றாமல் சாறு குறையாம வீருழக்கு
ஒன்றாய்க் கலந்து-மருந் தேயரைத்து-நன்றாய்க்

வெட்பாலை,தகரம்,சந்தனம் ஆகியவற்றை வகைக்கு 5கி எடுக்க. கொடுப்பை,தாளி,சாத்திரவேதி வீழி, முருக்கு,நொச்சிவேர்,குமரி, புளியாரை, ஆகியவற்றை வகைக்கு 650லி எடுத்து மேற்சொன்ன கடைச் சரக்குகளை அரைக்கவும்.

122. கூட்டித் திலதையிலே கூசாமல் வேகவைத்து
வாட்டும் வசனபதம் வந்ததென்றால் -வீட்டிலே
வட்டி லெடுத்து மகாதாளம்பூ பாத்திகட்டி
இருக்கி வடித்து யிருகஸ்த்தூ ரி-கோஷ்டமுடன்
குங்குமத்தோ பாசினையும் கூட்டியவின் சட்டமுடன்
பங்கயமாய் மாது பரிவுசெய்து-நங்கையரே
வாய்த்த சந்த னாதிதன்னை வார்த்துவெந் நீரிலே முழுக
ஏற்றபித்த நாற்பதவு மாத்துமே-அம்பத்து மேகம் இருபதுடன்

அரைத்த விழுதினையும் குடிநீரையும் சேர்த்துக் கொள்ளவும். அடுப்பில்வைத்து காய்ச்சி வேக வைத்து இறுத்துக் கொள்ளவும். கஸ்தூரி, கோட்டம்,குங்குமப்பூ, கோரோசினை ஆகியவற்றைப் பொடித்துப் போடவும்.வடித்து வைத்து தலையில் தேய்த்து வெந்நீரில் குறிப்பாட்ட நாற்பது வகை பித்தமும் இருபது வகை மேகமும் தீரும்.

123. நிந்திரகண்ட இதனில் சதைய டைப்பன்

அந்தரமாங் கல்லடைப்ப னகல்வாய்வு-தந்தியில்லா

மூத்திரப் பாளம் முகயெரிப்புக் கையெரிப்பு

வாய்த்தறிய சூலை வறச்சியுமே-நேத்திரத்தில் மால

காயமொடு சுக்கிரமும் கன்னுங் கடுத்துளைவு

மாய வலிப்பில்லா வறிநீஞ்ச-ஓயாமல்

மண்டை வலியும் வளறகத்தில் நின்ற தூரத்தும்

சதையடைப்பு, கல்லடைப்பு, வாய்வு, மூத்திரப் பாளம், முகஎரிப்பு, கைஎரிப்பு, சூலை வறட்சி, கண்வலி, சுக்கிரன், கண் கடுத்துணதல், மண்டைவலி, தொண்டைவலி தீரும்.

124. தொண்டை யிருமல் சிறப்புடனே -குண்டமதில்

பீனிச வீளை பிடரிநோய் பிழைகாலும்

வாய்நாத்த மெத்த வாய்வழுப்பு-தேனார்தன்

கெற்பமுடன் சூலை கீழ்நீர்க் கடுப்புடனே

சுற்ப நெடும்பாமு தனியுமே-அற்பமென்ற

எண்ணாதே யாவும் யினியசந்த னாதிதன்னைப்

பண்ணாக வைத்துப் பரிவு செய்து- பொன்னாடற்

மேனி தனக்கு மிந்து உரைபார்க்கி

லானியிடும் பொன்மேனி யாகுமே னாளவர்க்கு

இருமல், பீனசம், ஈளை, பிடரிவலி, வாய்நாற்றம், வாய்வழுப்பு, கெர்ப்பம், சூலை, நீர்க்கடுப்பு, பெரும்பாடு ஆகிய நோய்களும் தீரும்.

125. . . . . . . நேர்வா ளத்தை
மறையவே வசம்பு கட்டி
வுதவிய வுள்ளி தன்னோ
டுரைபுகை மேனிச் சாற்றில்
பதமுட னரைத்துப் பூச
பதகிரி பறக்குந் தானே

நேர்வாளத்துடன் வசம்பு, வெங்காயம் ஒட்டடை ஆகியவற்றை முறையே 35கி, 70கி, 210கி வீதமெடுத்து குப்பைமேனி சாற்றில் அரைத்து வெள்ளையாக உள்ள கால்பாதங்களுக்கும் கைகளுக்கும் பூச குணமாகும்.

126. கீத்துக் காலோடு கிந்தி நடப்பர்நீர்
வேற்றுக் காலிலை னானு மக்குத்தான்
நீத்துப் பானையில் காலிட வல்லராய்
னூத்துக் காதம் நடந்திடலா மென்னே ம

வெடிப்புகள் பாளபாளமாய் இருப்பவர், மெல்லிய இலைமேல் வைத்து நடக்க முடியாத அளவுக்கு காலில் வெடிப்புகள் உள்ளோர், கழுநீர்ப் பானையில் வைத்தாலும், கால் வைக்க முடியாத அளவுக்கு வெடிப்பும் வலியும் உள்ள பாதம் கீழ்கண்ட மருந்தை உட்கொள்ள வலி நீங்கி நூறு காதது ரம் நடப்பர்.

127. கெர்ப்பத்தை மேல் கழிச்சலுக்கு :

வெந்தயங்கள் தாவிபோட்டு வேளைவேருந் தாளி போட்டு வருத்து
வெந்தகுடி நீர்குடிக்கில் மெல்லியரே -அந்தமுள்ள
கெர்ப்பிணிக்கு வந்த கிராணி கழிச்சலும்போம்
உற்பனமாய்க் கண்டே உணர்

வெந்தையத்தையும் வேளை வேரையும் வறுத்து அதில் தண்ணீரை ஊற்றி கொதிக்க வைத்து அக்குடிநீரைக் கொடுக்க கெர்ப்பிணிக்கு வரும் கழிச்சல் தீரும்.

128. கிராணிக் குபாடம் :

சாதிக்கா யப்பிரகம் சாதிலிங்கம் வெங்காரம்
மோதுபிலி கெந்தக மோர்னாபி-கோதில்
திரிகடுகின் முள்ளிலவின் சேந்தபிசின் மத்தை
விரைசமன் செம்பிற ரசம் வேறு

சாதிக்காய், அப்பிரகம், சாதிலிங்கம், வெங்காரம், கெந்தகம், நாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, முள்ளிலவு, பிசின், ஊமத்தன்விதை ஆகிய - வற்றைச் சமமாக எடுத்துக் கொள்ளவும். எலுமிச்சம்பழச் சாற்றைத் தேவையான அளவு எடுக்கவும்.

129.சடைக்கஞ்சா விலையுள்நீர்மத் தடிவே ருமரசம்

மொவ்வொருநா ளூத்தி யரையத் -தெரியபின்

குன்றி யிடையு ருட்டிக் கொள்நிழ

லுலத்தி-யனுப் பானத்தி லேந்தி

சடைக்கஞ்சாவின் அடிவேர்ச்சாற்றை மேற்சொன்ன சாற்றுடன் ஒவ்வொரு நாளும் ஊற்றி அரைத்து 135மிகி. அளவுள்ள உருண்டையாய்ச் செய்து நிழலில் காயவைத்து தக்க அனுபானங்களில் இழைத்துக்கொடுக்கவும்.

130.எந்தங் கிராணி இரத்தக் கழிச்சல் வெப்பு

சேர்ந்த கிராணி திரிதோஉஷம் -சேர்ந்துவிடும்

காணுங் கிராணி கபடாடமிதின் பேராங்

கோணும்பிறந்தவிரை கூறினார் (கூ)

கிரணி, இரத்தக்கழிச்சல், வெப்பு,கிராணி, திரிதோடம், ஆகியவை மேற்சொன்ன குளிகையால் தீரும்.

..66

131. கிராணி ஆறுவகை மூலம், சூத வாய்வு; பிளிக்கும் சத்துமேல்

கழிச்சல் வுயிரிரைச்சல்_இதுக்கு திரியாதுகி_லேகியும்.

திரியகத திரிகடுகு வெட்டிவேர் நன்னாரி

திரிபாலை மதுரங் கோஷ்டமில வங்கமுடனே

அறியாத அமுக்கிரா சிறுதேக்கு நற்சீரம்

ஆனசாதிக் காயுமே

அவ்புடன் பிணியும் தெள்புடன் கழஞ்சொன்று

அதுநிரை தானொன்றுமே

சுக்கு, மிளகு, திப்பிலி, வெட்டிவேர், நன்னாரி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிமதுரம், கோட்டம், இலவங்கம், அமுக்கிரா, சிறுதேக்கு, நற்சீரகம், சாதிக்காய் ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்துக் கொள்ளவும்.

132. சுருகான வாய்விளங்கங் கிராம்புடன்

கழுவன் கழஞ்சி மூன்றே

கொடுவேலி கொத்துமல்லி கருஞ்சீரகம்

சுகை பரங்கிப்பட்டை செவியம்

பாரினி லிதுவகைக் கழஞ்சு நாலாகவே

படிபடி வழுத்திடித்து வொன்றாய்

சீருடனே யிருபொடி தேனுநெய் சர்க்கரை

திடமாய்வெவ் வேறேவிட்டு பிசைந்து கொண்டு

தினமுக் கழஞ்சு கொள்ள

வாய்விடங்கம், கிராம்பு இவற்றை வகைக்கு 15கி எடுக்கவும். கொத்துமல்லி, கருஞ்சீரகம், பரங்கிப்பட்டை, செவியம் இவற்றை வகைக்கு 20கி எடுக்கவும். எல்லாவற்றையும் இளவறுவலாக வறுத்து தனித்தனியே பொடித்துக் கொள்ளவும். தேன், நெய், சர்க்கரை இவற்றைத் தனித்தனியே ஊற்றி பிசைந்து தினமும் அதிலிருந்து 15கி எடுத்து உண் கொள்ளவும்.

133. ஆறாத விரோசனம் பீனிசம் கிராணியும்
அறுங்க னவுட னிளைப்பும்
ஆறுவகை மூலமும் கிறுச்சமு அமகமும்
அக்கினி யெரிவு மந்தகம்
ஏறாத சோகை காமாலை பவுத்திரம்
எற்றரியப் பித்த வாய்வும்
தீராத சோகையுந் தீர்ந்துவருஞ் செப்பினார்
செய்மாகக் கைகண்டதே

தீராத கழிச்சல், பீனசம், கிராணி, இளைப்பு, ஆறுவகை மூலங்கள், கிரிச்சரம், மேகம், அக்கினி, எரிமந்தம், சோகை, காமாலை, பவுத்திரம், பித்தவாய்வு, ஆகியவை மேற்சொன்ன சூரணத்தினால் தீரும்.

134. தாக சுரத்துக்குத் தஉதிறயும்:
தோத்தம் வில்வ வேரிழைத்துத்
அளாய் வருத்த கொத்தமல்லி
ஏத்த நல்லி வில்வமுடன்
இனிய சீரகம் நெற்பொரியும்
மாற்றமுடனே யீராளி
நீரில் போட்டு வற்றவச்சு
சாற்றை மெல்லக் குடிப்பீராய்ச்
சகல தாகம் பறந்திடுமே

வில்வவேரினைப் பொடித்துக் கொள்ளவும். கொத்துமல்லியை வறுத்துக் கொள்ளவும். வில்வம் (கனி) சீரகம், நெற்பொரி, ஆகியவற்றை 2.6லி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து குடிநீராய் வற்ற வைத்து குடிக்க தாகம் தீரும்.